சித்ரபாநு ஸ
தை - மாசி மீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 2

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

பிரசுரிக்குமிடம்:

இராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

ரூபா

February, 1943
Vol. 2, No. 2

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	மதியின் மஹிமை	38
2.	பதயோஜநா ரஸங்கள்	43
3.	திருப்பாவை	48
4.	ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ ஸ்துதி	53
5.	ஸ்ரீ அழகிய சிங்கர் பஞ்சரத்னம்	56
6.	அபிநந்தந பத்திரிகை	59
7.	காரயித்ருத்வ ஸித்தாந்த விமர்சநம்....	61
8.	மதிப்புரை	64
9.	திருநரசிங்கப் பெருமான்	65
10.	செய்திகள்	67
11.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	70
12.	கடோபநிஷத்	57

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப் பட்டிருக்கும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வாங்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வாங்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ꞉

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம꞉

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	சித்ரபாநு ௵ தை - மாசி ௴	ஸஞ்சிகை 2

“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாந꞉ |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||”

OFFICE OF THE REGISTRAR
11 MAR 1943
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹசரணாச்ரிதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தகேஹாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

210110

மதியின் மஹிமை

[ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான்]

(ஸம்புடம் 2, ஸஞ்சிகை 1 : பக்கம் - 7 தொடர்ச்சி)

ஆனாலும் இப்படி மஹாபலி பீஷ்மாதி வாக்யங்களைக் கொண்டு மனிதனுக்கு ஸுகதுக்கங்கள் முன்பு செய்த கர்மங்களுடைய பலன்களாக வருகின்றன வென்று நிச்சயித்து விட்டால், வ்யாதி வந்த மனிதன், 'நமக்கு இந்த வ்யாதி முன் செய்த கர்மத்தின் பலனாக வந்திருப்பதால், நாம் அதை அநுபவித்தே தீரவேண்டும்' என்று நிச்சயித்து, மருந்து உண்ணாமலும், மற்றும் தாநம் ஜபம் ஹோமம் அர்ச்சனைகளைச் செய்யாமலு மிருக்கவேண்டி வருமே. அப்பொழுது வ்யாதிகளுக்குப் பரிஹாரங்களை விதிக்கிற ஆயுர்வேத சாஸ்த்ரங்களும் சாந்தி ரத்நாகராதி க்ரந்தங்களும் வீணாகி விடுமே. அப்படியே ஒருவனை ஶத்ரு ஜயிக்க வந்த காலத்தில், 'நம்முடைய பூர்வ கர்மத்தின் பலனாக இந்த ஶத்ரு நம்மை ஜயிக்க வந்திருக்கிறா னாகையால், நாம் தோற்றுப் போவதே உசிதம்' என்று நினைத்து மற்றவன் ஶத்ருவோடு சண்டைபோடாமலிருக்க வேண்டி வருமே. அப்பொழுது தநுர்வேத சாஸ்த்ரம் வீணாகப் போகுமே. அப்படியே 'பாபகாரீ பாபோ பவதி' என்கிறபடியே முன் செய்த பாப கர்மத்தின் பலனாக ஒருவனுக்கு மறுபடியும் பாப கர்மத்தில் ப்ரவ்ருத்தி யுண்டாகுமானால், 'இது பூர்வ கர்ம பலம்' என்று அவன் அந்தப் பாபத்தை அநுஷ்டிக்கவேண்டி வருமே. அப்பொழுது பாபத்தைச் செய்யகூடாதென்று நிஷேதிக்கிற சாஸ்த்ரங்கள் வீணாகப் போய்விடுமே அப்படியே பூர்வ புண்ய கர்மத்தின் பலனாகப் புண்ய கர்மத்தில் ப்ரவர்த்திக்கிறவனையும் பூர்வ கர்மாநுகுணமாகப் புண்ய கர்மத்தில் ப்ரவர்த்திக்காதவனையும் பார்த்து, 'யஜஸ்வ' [புண்ய கார்யத்தைச் செய்] என்று விதிக்கிறதும் வ்யர்த்தமாகுமே. ஏனென்றால்: பூர்வ கர்மத்தின் பலனாக மறுபடியும் தர்மகார்யத்தில் தானாகவே ப்ரவர்த்திக்குமவனைக் குறித்து, 'நீ தர்மத்தைச் செய்' என்று -விதிப்பதில் பயனில்லை யாகையாலும், எந்தக் காரணத்தினாலாவது ஒரு கார்யத்தில் ப்ரவர்த்தித்தவனைக் குறித்து, 'நீ அதைச் செய்யவேண்டும்' என்று விதிப்பது 'அப்ராப்தே ஹி ஶாஸ்த்ரமர்த்தவத்' என்கிறபடியே சாஸ்த்ரத்தின் ஸ்வபாவத்திற்கு விருத்தமாகையாலும் உசிதமாகாது. பூர்வ கர்மத்தின் பலனாகப் புண்ய கர்மத்தில் ப்ரவ்ருத்தி யில்லாதவன், அதில் ஒரு காலத்திலும் ப்ரவர்த்திக்கமாட்டா னாகையால், அவனைக் குறித்துத் 'தர்மத்தைச் செய்' என்று விதிப்பதும் வ்யர்த்தமேயாகும்.

ஆகையினால் மனிதனுக்கு ஸுகதுக்கங்கள் எல்லாம் பூர்வ கர்மங்களின் பலன்களாக வருகின்றன வென்று சொன்னால், அவன் தான் செய்த

கர்மங்களின் பலத்தை அநுபவிக்கவேண்டியது அவஸ்யமாகையினலே, அந்தக் கர்ம புலன்களை அவன் அநுபவித்தே தீரவேண்டும்; இப்படிச் சொல்லும் பக்ஷத்தில் ப்ராயஸ்சித்த சாந்தி ஔஷத நீதி சாஸ்த்ரங்கள் வீணுகப் போகிறபடியாலும், ப்ராயஸ்சித்த பரிஹாராதிகளினுல் பூர்வ கர்மங்கள் நசித்து விடுகின்றனவென்னும் பக்ஷத்தில், செய்த கர்மங் களுக்கு ஸுக துக்கங்களினுடைய அநுபவ ரூபமான பயன் இல்லாமல் போவதாலும், கீழே குறிப்பிட்ட பல ஸந்தேஹங்கள் ஸம்பவிப்பதாலும், இந்த விஷயத்தை அங்கீகரிப்பது உசிதமாகுமோ என்கிற கேள்விக்கும் ஸமாதாநத்தை 'ஶப்தாதிஷ்வநுஷக்தாணாம் ஜந்மநா ஸஹ ஜாயதே' என்கிற வாக்யமே சொல்லுகிறது. எப்படியெனில்:

ஒருவன் முன்பு பண்ணின கர்மங்களின் பலன்களை அநுபவிப்ப தற்காக, அந்தப் பலன்களை அநுபவிப்பதற்கு யோக்யமான சரீரத்தை ஈஸ்வரன் கொடுக்கப்பெற்று, அவன் அந்தப் பலன்களை அநுப விக்கும் ஸமயத்தில், வேறே சில உயர்ந்த ஸுகங்களை அநுபவிக்க ஆசைப் பட்டால், அந்த ஸுகங்களுக்குக் காரணங்களான புண்ய கர்மங்களை அவன் அப்பொழுதே செய்தாலும், முன்பு செய்த கர்மபலன்களை அநுப விப்பதற்காக ஈஸ்வரனுல் கொடுக்கப்பட்ட அந்த ஶரீரத்தில் அப்பொழுது செய்த புண்யகர்மங்களுடைய பலன்களாக ஆசைப்பட்ட உயர்ந்த ஸுகங் களை அநுபவிக்க அவகாஶமில்லாததனுல், ஷெ கர்ம பலன்களான ஸுகங்களை அடுத்த ஜந்மத்திலேயே அநுபவிக்கவேண்டி வருகிறது. ஆகையால் அதற்காக மற்ருெரு ஜந்மம் பிறக்க வேண்டியதாகி, கர்ப்ப வாஸத்தையும் பிறப்பொடு நோயொடு மூப்போடிறப்பையும் அநுபவிக்க வேண்டியதாக நேரிடும். ஆதலால், இந்தக் கஷ்டங்களை அறிந்த புத்திமா ஞனவன் விஷயஸுகாநுபவங்களை அநுபவிப்பதற்காகக் கவலைப்படக் கூடாதென்கிறது. ஶப்தாத³꞉ - சப்தாதி விஷயங்கள், ஜந்மநா ஸஹ - மற் ருெரு பிறவியோடு சேர்ந்தே, ஜாயதே ஹி - உண்டாகிறதென்று ப்ர ஸித்தமன்ருே? என்று அந்வயம்.

இது நிற்க: கீழே சொல்லப்பட்ட சில ஸந்தேஹங்களுக்கு ஸமா தாநங்களை இங்குத் தெரிவிக்கிருேம்.

"யே ச தீர்க்காயுஷ꞉ ஶூரா꞉ பண்டிதா போகிநஸ்ததா |
நீரோகா ரூபஸம்பந்நாஸ்தேஷாம் ஜந்மாந்தரே க்ருதம் ஸுக்ருதம் ||"

[எந்த மனிதர்களிடத்தில், அதிக காலம் ஜீவித்திருப்பது, சூரத்தன்மை, பாண்டித்யம், ஸுகாநுபவம், ஆரோக்யம், அழகு, இவைகள் இருக்கின் றனவோ, அவர்கள் முன் ஜந்மத்தில் அந்த நற்குணங்களுக்குக் காரணங் களான புண்யங்களைச் செய்திருக்கிருர்கள்.]

"ஸுக³ணிதா யே ச நிர்த⁴நாஶ்ச விரூபா வ்யாதி⁴தாஸ்ததா |
ப்ரேஷ்யாஶ்ச மூர்க²ஶ்ச தேஷாம் பாபம் க்ருதம் புரா ||"

[எவர்களிடத்தில், துர்க்குணங்கள், தாரித்ர்யம், வைரூப்யம், மஹா வ்யாதிகள், அடிமைத்தனம், மூர்க்கத்தன்மை, இவைகள் இருக்கின்

றனவோ, அந்த மனிதர்கள் இந்தத் துர்க்குணங்களுக்குக் காரணங்களான பாபங்களை முன் ஜந்மத்தில் செய்திருக்க வேண்டும்.] இந்தப் பாரத வசநங்கள் போன்ற மற்றும் அநேக ப்ரமாணங்கள், 'மனிதர்களுடைய ஸுகங்களுக்கும் துக்கங்களுக்கும் காரணங்கள், அவர்கள் முன் ஜந்மங்களில் செய்த புண்ய பாபங்கள்தான்' என்கின்றன.

ஆகையினால் கீழே குறிப்பிடப்பட்ட 'உதூதஹவிவாகாஸு' என்கிற வசநமும், முன் ஜந்மத்தில் புண்யம் செய்யாதவனுக்கு அடுத்த ஜந்மத்தில் ஸுகமில்லை என்கிறது. மனிதனாகப் பிறந்திருக்குமவன் புண்ய கர்மங்களைச் செய்யமுடியாதென்றாவது, புண்யங்களைச் செய்யக் கூடாதென்றாவது சொல்லவில்லை. ஆகையினால் மனிதனுக்குப் பூர்வ கர்மத்தின் பயனாக வ்யாதியோ அல்லது ஶத்ருவோ ஸம்பவித்தாலும், அந்த வ்யாதிக்குப் பரிஹாரங்களான மருந்து, தாநம், ஜபம், ஹோமம், அர்ச்சனை முதலியவைகளையும், சத்ருவை ஜயிப்பதற்குக் காரணங்களான சதுரங்க ஸேனை ஆயுதங்கள் முதலியவைகளையும் ஸம்பாதித்து, அவைகள் மூலமாக அவன் வ்யாதியையும் சத்ருக்களையும் போக்கிக்கொள்ளலாம். ஆகையினால் ப்ராயஶ்சித்த மந்த்ர ஔஷதாதி சாஸ்த்ரங்களுக்கும் மற்றும் தர்மசாஸ்த்ரங்களுக்கும் வையர்த்யத்திற்கு ப்ரஸக்தியே இல்லை. ஆனால் 'பாப கர்மங்களுக்குப் பலனாக ஈஶ்வரனால் கொடுக்கப்பட்ட வ்யாதிகளையோ சத்ரு ஹிம்ஸை முதலிய கஷ்டங்களையோ அவன் அநுபவிக்காமல், ப்ராயஶ்சித்தம் முதலிய பரிஹாரங்களினால் கர்மத்தைப் போக்கிவிட்டால், ஷை பாப கர்மங்களுக்குப் பயனில்லாமல் போய்விடுமே; ஒருவன் செய்த பாபங்கள் பயனில்லாதவைகளாகப் போய்விடலாமா?' என்று ஸந்தேஹமுண்டாகலாம்.

இதற்கு ஸமாதாநம்:—கர்மங்களுடைய பலன்கள் நியதங்களென்றும் அநியதங்களென்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள்: ப்ரபலமான ஶாபம் முதலியவைகளால் உண்டாகும் பாப கர்ம பலன்களான கஷ்டங்கள் அவஶ்யம் அநுபவிக்கப் படுகிறபடியினால் அவை நியதங்கள். அங்ஙனன்றிக்கே: சில பாபங்களைக் குறித்து 'இந்தப் பாபங்களுக்கு ப்ராயஶ்சித்தம் செய்துகொண்டால் பாபத்தின் பலமான வ்யாதி முதலிய பாப கர்ம பலன்கள், பாபத்தைச் செய்தவனுக்கு உண்டாகவேண்டாம்; அவன் ப்ராயஶ்சித்தம் முதலிய பரிஹாரங்களைச் செய்துகொள்ளாமல் போனால் பாப கர்மங்களுடைய பலன்களான வ்யாதி முதலியவைகள் பாபத்தைச் செய்தவனுக்கு உண்டாகட்டும்' என்கிற ஈஶ்வரனுடைய அநியத ஸங்கல்பத்தினால் ப்ராயஶ்சித்தங்களைப் பண்ணினவன் விஷயத்தில் ஷை பாப பலன்களான வ்யாதி முதலிய துக்கங்கள் உண்டாகாமல், ப்ராயஶ்சித்தங்களைப் பண்ணாதவர்கள் விஷயத்தில் ஷை வ்யாதி முதலிய துக்க ரூபங்களான பாப பலன்கள் அவஶ்யம் உண்டாகிவிடுவதாலே அந்தப் பலன்கள் அநியதங்களெனப்படும். ஆகையினால் நியத பலன்களான கர்ம விஷயத்தில் வ்யாதி முதலிய பலன்கள் அநுபவிக்கப் படுவதாலும், அநியத பலன்களான கர்ம விஷயத்திலும் ப்ராயஶ்

சித்தம் பண்ணுகிறவனுக்குப் ப்ராயஶ்சித்தமே பலனாகவும், ப்ராயஶ்சித்தத்தைப் பண்ணாதவனுக்கு வ்யாதி முதலிய பலன்கள் ஸம்பவிப்பதாலும், ஒரு பாபத்திற்கும் பலனில்லாமற் போகவில்லை. ஆனால், 'ஒரே பாப கர்மத்திற்கு நியத பலமான வ்யாதி முதலிய கஷ்ட பலன்களையும், அநியத பலமாய் வ்யாதியைப்போல் கஷ்டமில்லாத ப்ராயஶ்சித்த ரூப பலன்களையும் ஈஶ்வரன் கொடுத்தால் அது உசிதமாகுமா?' என்று சங்கிக்கலாம். மனிதன் பாபத்தைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தமில்லாமலிருக்கிற தேச காலங்களில் பாபங்களைச் செய்து, பிறகு அநுதாபாதிகளு மில்லாத விஷயத்தில் கஷ்ட பலன்களான வ்யாதிகளையும் தேச கால ஸங்கடங்களினால் பாபங்களைச் செய்து, பிறகு பாபத்திற்கு அநுதாபமுள்ள விஷயத்தில் ப்ராயஶ்சித்த ரூபமாய் லகுவான அநியத பலன்களையும் ஈஶ்வரன் கொடுப்பதால் அது அநுசிதமாகாது.

இப்படி அநியத பலன்களான கர்மவிஷயத்தில்தான் ப்ராயஶ்சித்தம் சாந்தி முதலியவைகளை விதிக்கிற சாஸ்த்ரங்களுக்கும், மற்றும் ஜீவனுக்கு ஸ்வாதந்த்ர்யத்தை அநுஸரித்துத் தர்ம விதாயக சாஸ்த்ரங்களுக்கும் அதர்மத்தை நிஷேதிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் அவகாசமுண்டு. நியத பலன்களான கர்ம விஷயத்தில் ஷெ சாஸ்த்ரங்களுக்கு ப்ரயோஜநம் ஸம்பவிக்காது. இதனால் ஔஷதம் ஜபம் ஹோமம் முதலிய பரிஹாரங்களினால் ஒருவனுக்கு வ்யாதி நசித்து அவன் ஜீவித்திருப்பதற்கும், மற்றொருவன் அதே பரிஹாரங்களைச் செய்தும் வ்யாதி நசிக்காமல் அவனைக் கொன்று விடுவதற்கும் காரணம் வ்யாதிக்காகச் செய்த சாஸ்த்ரீய பரிஹாரங்களினால் வ்யாதி நீங்கி ஜீவித்திருப்பவன் அநியத பலமான கர்மமுடையவனென்றும், அங்ஙனன்றிக்கே, பரிஹாரங்களைப் பண்ணியும் வ்யாதி நசிக்காமல் மரணமடைந்தவன் நியத பலமான கர்மத்தையுடையவன் என்றும் சொல்லப்பட்டதாகிறது. இந்த விஷயம் பைஷஜ்ய ரத்நாவளீ என்கிற ஆயுர்வேத க்ரந்தத்தில்,

"𑌜𑌪𑌹𑍋𑌮𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍈𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌨 𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 ।
𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌰𑍋𑌗𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌧𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌿𑌰𑌪𑌿 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌹𑌿 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 ।"

[ஒருவன் கால ம்ருத்யுவினால் நிச்சயமாக மரித்துவிடவேண்டிய காலத்தில், வ்யாதி பாம்பு இவைகளினால் பீடிக்கப்பட்டால், அதற்குப் பரிகாரங்களான ஜபம் ஹோமம் தானங்களைத் தேவலோகத்து வைத்யனான தந்வந்தரீயானவன் நேரில் வந்து செய்தாலும், அவனை இறந்து போகாமல் பண்ணமுடியாது] என்று சொல்லப்பட்டிருக்கிறது இதனால் இது, நியத பலமான கர்மத்தினா லுண்டாகிறது என்று சொன்னதாக முடிந்தது. தக்ஷகன் பரீக்ஷித்தைக் கடிக்கவந்த ஸமயத்தில் அந்தத் தக்ஷகனுடைய விஷத்தைப் போக்கிப் பரீக்ஷித்தினிடம் அளவிறந்த ஸம்மானத்தை வாங்குவதற்காக வந்த காஶ்யபன் என்கிற ப்ராம்ஹணன், தக்ஷகனிடம் தன்னுடைய மந்த்ரத்தின் ஶக்தியைக் காட்டினபிறகு, தனது

தபோமஹிமையினால் உண்டான திவ்ய ஜ்ஞாநத்தினால், 'இந்த ஸமயத்தில் பரீக்ஷித்துக்கு இது கால ம்ருத்யு; ஆகையினால் நாம் எவ்வளவு மந்த்ர சக்தியை உபயோகப்படுத்தினாலும் பரீக்ஷித்து ஜீவிக்கப் போகிறதில்லை' என்கிற விஷயத்தைத் தெரிந்துகொண்டு, பரீக்ஷித்தினிடம் போகாமலே, தக்ஷகன் கொடுத்த பணங்களை வாங்கிக்கொண்டு திரும்பி ஊருக்குப் போய்விட்டான் என்று பாரதம் ஆதி பர்வத்தில் சொல்லி யிருப்பது இங்கு உணரத்தக்கது. இது நிற்க: இனி,

"𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌵𑌰𑍍𑌧𑌯𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ।
𑌵𑍃𑌦𑍍𑌧𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑍇𑌵 𑌪𑍁𑌨𑌰𑌾𑌰𑌭𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜 ।
𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ।
𑌨𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌪𑌾𑌪𑌮𑍇𑌵 𑌪𑍁𑌨𑌰𑌾𑌰𑌭𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜 ॥"

[ஒருவன் செய்த புண்ய கர்மாவானது அவனுக்கு மறுபடியும் புண்ய கர்மத்தில் ப்ரவ்ருத்தியை உண்டாக்குகிறது; அப்படியே ஒருவன் செய்த பாபமானது அவனுக்கு மறுபடியும் பாபத்தில் ப்ரவ்ருத்தியை உண்டு பண்ணுகிறது] என்றும் சொல்லுகிறபடியினால், புண்யத்தை விதிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் பாபங்களை நிஷேதிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் வையர்த்ய முண்டாகிறது என்று முன்பு சொல்லப்பட்ட சங்கைக்கு ஸமாதானம் சொல்லுகிறோம்.

பூமியில் சாகுபடி செய்கிறவன் நெல் துவரை உளுந்து முதலிய விதைகளை க்ரயத்துக்கு வாங்கி ஈரமுள்ள பூமியில் விதைத்தால், அதற்குப் பலன் அந்த விதைகள் முளைத்துவிடுவது மாத்ரமேயல்லாமல், முளைத்த பிறகு அது வளர்வது புஷ்பிப்பது காய்ப்பது பழுப்பது ஆகிய எல்லாம் விதைக்குப் பயனாகமாட்டா. அப்படியே புத்ரகாமேஷ்டி யாகத்திற்குப் புத்ரன் பிறப்பது மாத்ரம் பயனாகுமே தவிர, அக்குழந்தை தீர்க்காயுஸ்ஸாக இருப்பதும், பிதாவுக்கு அநுகூலமாக இருப்பதும், அவனுக்குப் புத்ரன் உண்டாவதும், புத்ரகாமேஷ்டி யாகத்திற்குப் பயனாகமாட்டா. அதைப்போலவே முன்பு பண்ணின புண்யத்திற்கு மறுபடியும் புண்யத்தில் ருசியை உண்டுபண்ணுவது மாத்ரம், முன்பு பண்ணின பாபத்திற்கு மறுபடியும் பாப கர்மத்தில் ருசியை உண்டுபண்ணுவது மாத்ரம் பலனாகுமேயல்லாமல், மேல் மேலும் புண்ய பாபங்களை உண்டாக்கி முடித்து வைப்பது பயனாகமாட்டாது.

முன்பு பண்ணின புண்ய பாபங்களுக்குப் பலனாக மறுபடியும் புண்ய பாபங்களில் ருசியுண்டானால் அதைத் தன்னுடைய விவேகம் முதலியவைகளினால் மாற்றிக்கொள்ள ஆத்மாவுக்கு யோக்யதையை ஈஶ்வரன் முன்பே கொடுத்திருப்பதால், முன்பு கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் ஸந்தேஹத்திற்கும் இடமே இல்லை. இவ்விஷயங்களில் விஸ்தாரமாகத் தெரிந்துகொள்ள ஆசையுள்ளவர்கள், ஸ்ரீபாஷ்யம் தாத்பர்ய சந்த்ரிகைகளை ஆசார்யனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பதயோஜநா ரஸங்கள்

[வித்வான் ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், பி.ஏ., பி.எல்.,
திரிசிராப்பள்ளி]

(ஸம்புடம் 2, ஸஞ்சிகை 1: பக்கம் 12-தொடர்ச்சி)

6-ம் ஶ்லோகம்—(1) 'அதாத:' என்ற முதல் ஸூத்ரப் பொருள்களையும் ஒரே சாஸ்த்ரம் என்பதற் கிணங்க விளக்குகிறார். 'அதாத: ஶாரீரகாம்ஶே பஹுவிதவிஹிதப்ரஹ்ம மீமாம்ஸிதவ்யம்' என்று இந்த ஶ்லோகம் 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்பதற்குப் பொருளை உரைத்தது. முதல் பாதத்தால் பூர்வ வ்ருத்தம் 'முன் சென்றது' கர்ம விசார மென்பதையும், அது எப்படி ப்ரஹ்ம விசாரத்திற்கு ஹேதுவாகிற தென்று 'அத:' சப்தத்தால் சொல்லப்படும் ஹேதுத்வத்தையும் விவரிக்கிறது. 'கேவலகர்மணாமல்பாஸ்திரபலத்வம்' என்னும் ஸ்ரீபாஷ்ய பதங்களையே ப்ரயோகித்துளது. கர்மங்களால் ஆராத்யரான தேவதைகளும் 'அல்பாஸ்திரர்கள்'. (2) 'பஹுவிதவிஹிதப்ரஹ்ம'. இதனால் ப்ரஹ்ம சப்தத்தின் பொருளைக் கூறி, அது நிர்க்குண மல்லவென்று தெளிய விளக்குகிறார். 'ப்ருஹந்தோ ஹ்யஸ்மிந் குணா:' என்பது நிர்க்குண மென்பார் மிடற்றைப் பிடிக்கும். 'ப்ரஹ்ம சப்தத்தின் வ்யுத்பத்தியாலேயே அது நித்யசுத்த பத்த முக்த ஸ்வபாவம், ஸர்வஜ்ஞம் ஸர்வசக்தி ஸமந்விதம்' என்று சங்கர பாஷ்யம். 'இப்படி ஸகலதோஷ சூந்யமான நிர்க்குணம் ப்ரஸித்தம்' என்று அதன் வ்யாக்யாநமான ரத்நப்ரபை 'நிர்த்தோஷம்' என்பதுதான் 'நிர்க்குணம்' என்பதற்குப் பொருளென்று உரைத்தது. ஶ்வேதாஶ்வதரோபநிஷத்தில் 'கேவலோ நிர்குணஶ்ச' என்னுமிடத்தில் சங்கர பாஷ்யமும் ப்ரக்ருதிகுண ரஹிதமென்று பொருளுரைத்தது. பிறரும் 'நிர்க்குணம்' என்பதற்கு 'நிர்த்தோஷம்' என்று பொருளுரைத்தே தீர்வ ரென்பதை ஸ்வாமி ப்ரஹ்ம சப்த வ்யுத்பத்திப் பொருளை யுரைப்பதால் வ்யஞ்ஜநம் செய்கிறார். பஹுவித மஹிமையுடையது ப்ரஹ்மம். (3) 'க்ருத்ஸ்நஸ்வாத்யாய:' என்றும் 'ஸ்வாத்யாயாத்யயநகார்த்ஸ்ந்யே' 'க்ருத்ஸ்நாவாப்தவேதை:' என்றும் ஸசிரஸ்கமான முழு வேதாத்யயநம்தான் ஸ்வாத்யாயாத்யயந விதிவிஹித மென்பதைக் காட்டுகிறார். பாமதியில் மட்டும் உபநிஷத்தை விட்டு விட்டுப் பூர்வ காண்டத்தை மட்டும் அத்யயநம் செய்யலாமென்று பேசப்பட்டது.

அதை மற்றொருவரும் ஒப்பவில்லை. அந்தப் பாமதீ வார்த்தையைத் தள்ளு வதில் நோக்கு. (4) ஸம்ஸ்க்ருத ப்ராயமான தேசத்தில் வஸிப்பதாலும், வ்யாகரண நிருக்த அங்கங்களோடு சேர்த்து அத்யயநம் செய்வதாலும், மேலாகப் பொருள் தெரியு மென்றது சிந்தாமணி. 'கர்ம விசாரம் செய்ததால் அந்த ந்யாயங்களால் ஸம்ஸ்க்ருதமான ஹ்ருதயத்தால் கர்மங்களின் பலன்கள் அல்ப மென்றும் அநித்ய மென்றும் நிச்சயிக்கலா மென்று பதயோஜனை ரஸமாக உரைத்தது. ஸம்ஸ்க்ருத தேச வாஸத்தால் ஆபாத ப்ரதீதி ; மீமாம்ஸா ந்யாய ஸம்ஸ்க்ருத ஹ்ருதயத்தால் அல்பாஸ்திரத்வ நிர்ணயமென்று ரஸம். (5) 'வஹாவியசஹிச' என்பதற்கு, 'குணத்தாலும் விபூதியாலும் அநந்தம், தன்னை யறிந்து அநுபவிப்பதால் அநந்த ஸ்திரபலலாபஹேது' என்றும், 'ப்ரஹ்ம' என்பதற்கு 'ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் அநவதிகாதிசயமான வஸ்து' என்றும் பதயோஜனைப் பொருள்.

7-ம் ஶ்லோகம் — முழு வேதத்திற்கும் வ்யாக்யாநமாகும் மீமாம்ஸை. மூலத்தின் க்ரமத்தை வ்யாக்யாநமான மீமாம்ஸையும் அநுஸரிக்கவேணும். இதைத் தலைகீழாக்க லாகாது. இது முக்ய க்ரமம். முக்யமான வேதத்தைப்போல, அதன் பொருளுரைக்கும் மீமாம்ஸைக்கும் க்ரமம். கர்ம மீமாம்ஸா ந்யாயங்களை ப்ரஹ்ம ஸூத்ரங்கள் உபஜீவிக்கின்றன. இதனால் ப்ரஹ்ம ஸூத்ரங்கள் பின்பு அத்யயநம் செய்யத்தக்கவை. வேதாத்யயநம் முடிந்ததும் கர்ம விசாரம் செய்யவேண்டிய காலம். இதுவே ப்ராசீந ஸம்ப்ரதாயமென்று சங்கருடைய தைத்திரீய பாஷ்யம் ஸ்பஷ்டமாக உரைத்தது. சில கர்மங்களால் 'அம்ருதத்வம் கிடைக்கும்' 'அக்ஷய்ய பலம் கிடைக்கும்' என்று கர்மகாண்ட ஶ்ருதி பேசுவதுபோலக் காண்பதால், அது நிச்சயம்தானு என்று விசாரித்து, அங்கே யதாஶ்ருதப் பொருள் ஸத்யமல்லவென்று நிச்சயம் பிறந்துதான் நித்ய பலத்தைத் தேட ப்ரஹ்ம விசாரத்தில் இறங்குவர்.

8-ம் ஶ்லோகம்—ப்ரஹ்ம மீமாம்ஸைக்கு முன் வ்ருத்த மென்பதை, 'வரீக்ஷ்யலொகாநு கஃசிதாநு ஸாஹணொ நிவெடிசா யாஜ :' என்று ஶ்ருதியே பேசிவிட்டபடியால், தர்க்கம் செய்ய இடமேயில்லை. 'பூர்வ மீமாம்ஸா ந்யாயங்களைக்கொண்டு கர்ம பலன்கள் அல்பம், அஸாரம், அநித்யம் என்று நிச்சயித்து, வைராக்ய மடைந்து, நித்ய பலத்தைத் தரும் ப்ரஹ்மத்தைத் தேடக் குருவிடம் செல்வர்' என்று பிறரும் இந்த ஶ்ருதிக்குப் பொருள் உரைத்தனர். ஸூத்ரகாரரும் 'அத' என்று இந்த ஶ்ருதியை நினைத்து, 'கர்ம பல பரீக்ஷைக்குப் பிறகு' என்று கூறினர்.

9-ம் ஶ்லோகம்—தோளில் ஆட்டுக்குட்டியைப் போட்டுக்கொண்டு ஊரெல்லாம் தேடுவதுபோல், நம் கையிலிருப்பதும் நம் ஸ்வரூபமேயான ப்ரஹ்மத்தை நாம் தேடுவது. பழுதைப் பாம்பைத் தொலைக்கத் தடி

வேணுமோ? தடியா லடிக்க வேணுமோ? இல்லாத ஸம்ஸாரத்தைத் தொலைக்க இல்லையென் றறிந்தால் போதாதோ என்பர். '𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑍍𑌧𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃' '𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾' என்பதற்கு '𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯 𑌬𑌲𑌾𑌤𑍍' என்று பதயோஜனை. '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌅𑌸𑌿' என்பதை 'மஹாவாக்யம்' என்பர் பிறர். ஸத்வித்யை முழுவதும் ஓர் மஹாவாக்யம். அதில் '𑌸𑌨𑍍𑌮𑍂𑌲𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯𑍇𑌮𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌦𑌾𑌯𑌤𑌨𑌾𑌃 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃। 𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌶𑍍𑌵𑍇𑌤𑌕𑍇𑌤𑍋' என்பது முழு வாக்யம். அதில் 'தத் த்வம் அஸி' என்பது ஒரு துண்டு. முழு வாக்யத்தை விட்டுவிட்டு ஒரு சிறு துண்டை மட்டும் எடுத்துக்கொண்டு, அதை மஹா வாக்யமென்று பேசி, முழு வாக்யத்தின் மற்றைப் பெரும் பாகத்திற்கு விரோதமாயும், உபக்ரமப் பேச்சுக்கு விரோதமாயும் பொரு ளுரைக்கலாமோ? 'இந்தச் சேதநாசேதந விஶ்வம் முழுவதும் இந்த ஸத்தென்னும் ப்ரஹ்மத்தை உயிராக (ஆத்மாவாக) உடையது; அது ஸத்யம்; அவன் ஆத்மா (உயிர்), அது நீ' என்று வாக்யம். எல்லா ஜீவரும், எல்லா ஜட ப்ரபஞ்சமும் ப்ரஹ்மாத்மகம் என்பதை முதலிலேயே விதித்தாய்விட்டது. 'நீயும் அது' என்பது புது விதியல்ல; முன் ஸாமாந்யமாக முழு உலகத்தைப்பற்றியும் விதித்த ப்ரஹ்மாத்மகத்வத்தை 'நீ' என்றும் ஜீவ விஶேஷத்திலும் உண்டென்பதை உபஸம்ஹாரம் செய்வதே யாகுமென்று ஸ்ரீபாஷ்யம். அல்லது 'அது' என்பது '𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍' என்பதைச் சொல்லலாம். 'நீயும் ப்ரஹ்மாத்மகனே; நீ மட்டும் ஸ்வநிஷ்டனல்ல, ஸ்வாதாரனல்ல' என்றும் பொருள் கூறலாம்.

10-ம் ஶ்லோகம்.—(1) கர்ம மீமாம்ஸை ப்ரஹ்ம மீமாம்ஸை சேர்ந்து, மீமாம்ஸா சாஸ்த்ரத்தின் முழு சரீரம். கர்மம் போதும்; கர்ம மீமாம்ஸை போதும்; ப்ரஹ்ம விசாரம் வேண்டா மென்பர் கர்ம மீமாம்ஸகர். கர்ம மீமாம்ஸை மீமாம்ஸையின் உடல் மட்டுமே; சிரஸ் இல்லாத உடல். உடல் வேண்டாம், தலை மட்டும் போதுமென்பர் ப்ரஹ்ம மீமாம்ஸகர். கர்ம மீமாம்ஸை மட்டும் போதும் என்பவர், தலையில்லா உடலைக் கொள்வதால் அவர் கபந்த மீமாம்ஸகர். தலையில்லா உடல் கபந்தம். ராமாயணத்தில் கபந்தனை இங்கே நினைக்கவேணும். அவன் பெருமாளை நேரில் கண்டும் துதித்தும் ஸ்வர்க்கமே வேண்டுமென்று அதையே பெற்றான். உடலில்லாத தலை மட்டும் பயனற்றது. ஜடாயு மோக்ஷம் பெற்றார்; சபரியும் மோக்ஷம் சென்றாள். கபந்தன் ஸ்வர்க்கத்தோடு நின்றான். (2) 'முழு வேதத்திலும் ஆபாதப் பொருள் (மேல் பொருள்) மனத்திற்பட்டு, ஸம்சயம் பிறந்து, நிச்சயம் செய்ய விசாரம் செய்யவேண்டியதில், முழு வேதத்தையும் விசாரிக்க மாட்டாரோ' என்று ஸாராவளி. இங்கே பதயோஜனை உரைத்தது மிக ரஸம். தலையிலும் உடலிலும் முழுவதும் தினவு எடுத்தால், முழு

உடம்பிலும் தினவைப் போக்க முயலாரோ? ஓரிடத்தில் மட்டும் கண்டூயநம் செய்துவிட்டுவிடுவரோ என்று அழகான உரை. ‘ஸம்ஶயிதானி ஸந்தூர்ணாந்யபி ஹ்ருஷ்டாநி விக்ஷிப்தேநைவ காரிகாஸு’ என்பது உரை. ‘ஸம்சயம்’ என்பது ‘தினவு’. ‘தினவு கெடச் சொல்லும் திருவெள்ளறைச் சோழியர் ஸம்ப்ரதாயம் மீமாம்ஸாத்யயந ஸம்ப்ரதாயம். மீமாம்ஸா பாதுகையின் இரண்டாம் ஶ்லோகத்தில், ‘அப்புள்ளாரிடம் கர்ம ப்ரஹ்ம மீமாம்ஸா சாஸ்த்ரத்தைக் கேட்டோம்’ என்று கூறப்பட்டது. ஸாராவளி 5-ம் ஶ்லோகத்தில் ‘அத்யயநம்’ என்பதற்கு ‘ஸ்வதந்த்ரோச்சாரண ஶக்திபர்யந்தாக்ஷரராஶிக்ரஹணாநுகூலோச்சாரண ரூபம்’ என்று பதயோஜநை. ‘வேதத்தின் ஸ்வாதீநோச்சாரண சக்தி லாபம் அத்யயநத்தின் பலம்’ என்ற பஞ்சபாதிகா விவரணத்தை நினைப்பது. வேதத்தை அத்யயநத்தால் வசப்படுத்தி மனப்பாடமாக ஸ்வாதீநமாக உச்சரிக்கும் சக்தி. ‘ஸ்வாதிஷம்’ என்பதையே ‘ஸ்வதந்த்ரம்’ என்று பேசியுளது அக்ஷரராசி க்ரஹணம்தான் ஃபலமென்பது பஞ்சபாதிகா விவரணம் முதலிய பல க்ரந்தங்களின் நிஷ்கர்ஷம். ஸ்ரீ பாஷ்யத்தைப்போலவே அவையெல்லாம் உரைத்தன. பாமதி மட்டும் வேறு; குமாரி பட்டர் கூறிய அர்த்த ஞாந பர்யந்தத்வத்தை அநுஸரித்தது.

11-ம் ஶ்லோகம்—இங்கே மீமாம்ஸை யெல்லாம் ‘ஒரே ப்ரபந்தம்’ என்று ஐகசாஸ்த்ர்யத்தை அறுதியிடுகிறார். சங்கர பாஷ்யாதி க்ரந்தங்களும் ப்ராயேண அப்படியே. கர்மாநுஷ்டாநத்திற்கும் ப்ரஹ்ம ஜ்ஞாநத்திற்கும் விரோத மென்பதை ‘அர்வாசீநர்கள்’ ஆரோபித்துப் பொய்யாகப் பேசினர்களென்று பதயோஜனை. தாத்பர்ய சந்த்ரிகை முடிவில் ஸாதித்தபடி, ப்ரஹ்மாநுபவ யோகத்தில் முழுகி மெய்ம்மறந்திருக்கும் யோகதசையில் தான் கர்மவிதி நிர்ப்பந்தமில்லை யென்று கீதா பாஷ்யத்தில் சங்கரர் அபிப்ராயம். ‘அது நமக்கும் ஸம்மதம்தான்’ என்று சந்த்ரிகை. சங்கரருக்கும் பின்னல் வந்த ஆதுநிகர் இப்படி ஞான கர்ம விரோதம் கல்பிக்கிறார்கள்.

12-ம் ஶ்லோகம்—கர்ம மீமாம்ஸையின் தேவதாதிகரணத்தால் யாதொரு விரோதமுமில்லை யென்று தத்வடீகை முதலிய க்ரந்தங்களில் நிரூபித்ததை இந்த வ்யாக்யாநங்களும் உரைக்கின்றன.

13-ம் ஶ்லோகம்—ஜைமிநிக்கும் வ்யாஸருக்கும் தாத்பர்ய விரோதமில்லை யென்று நம் க்ரந்தங்களில் நிரூபித்ததை, ஸ்ரீ தீக்ஷிதரும் பரிமளத்தில் அப்படியே எடுத்துரைத்தார்.

14-ம் ஶ்லோகம்—சாஸ்த்ரக்காரர்கள் ஒரே விஷயத்தைத் திரும்பவும் திரும்பவும் பேசலாகாதென்பர். பூர்வ மீமாம்ஸையில் சொன்னதையே இங்கே திரும்பவும் சொல்வது புநருக்தமாகுமே; அங்குச் சொன்னதை இங்கே அழித்துப் பேசினல் உக்தவ்யாகாதமாகுமே யென்ற சங்கை

களும் பரிஹாரம் செய்யும் முறை பொதுவாகக் காட்டப்படுகிறது. ‘ஶாஸ்த்ரைக்யம்’ என்று ஒரே சாஸ்த்ர மென்பதைப் பேசுகிறுர்.

15-ம் ஶ்லோகம்—(1) ‘ஜைமிநியின் 16-அத்யாயங்களோடு சாரீரக மீமாம்ஸை தொடர்ந்து சேர்ந்ததால், ஒரே சாஸ்த்ரமென்று ஸித்திக்கிறது’ என்பது போதாயந வ்ருத்தி. 16 அத்யாயமான சாஸ்த்ரத்தில் 12 அத்யாயங்களுக்கு மேல் 4 அத்யாயங்கள் ‘ஸங்கர்ஷம்’ என்று பேர் கொண்டவை. ‘இந்த ஸங்கர்ஷ மென்னும் ப்ரபந்தம் காசக்ருத்ஸ்நரென்னும் மஹர்ஷியால் ப்ரணீதம்’ என்று பட்டர் தத்வ ரத்நாகர வாக்யத்தைப் பதயோஜநை உதாஹரித்தது. போதாயநர் உக்தியும், பட்டர் உக்தியும் ஸமாநமாக கௌரவிக்கத்தக்கவையென்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளத்தைக் கவனிக்கவேணும். பட்டரிடம் அத்தனை கௌரவம். ஸேஶ்வர மீமாம்ஸையின் தொடக்கத்தில் முதலில் ஜைமிநிக்கு ஜயதி மங்களம். பிறகு காசக்ருத்ஸ்நருக்கும் ஜயம்; பிறகு நாராயணவதாரரான ஸ்ரீமான் பாதராயணருக்கும் ஜயதி மங்களம் என்று ஸாதித்ததில் பட்டர் ஸ்ரீ ஸூக்தியை யநுஸரித்தார். மஹா பாஷ்யத்தில் ‘காசக்ருத்ஸ்நரால் ப்ரோக்தமான மீமாம்ஸை காசக்ருத்ஸ்நீ’ என்று பதஞ்சலி யுரைத்தார். (2) ‘[illegible]’ வீணாகப் பெரியோர்கள் ஸூக்திகளில் ஒன்றை நாம் வாயிக்கலாகாது. ஓரிடத்தில் உபசாரமாகப் பொருளைக் கூறி ஒரே தாத்பர்ய மாக்கவேணும் ‘அவிரோத நிர்வாஹம் ஸம்பவிக்கும்போதும் துராக்ரஹமாய் வீணாகவே’ என்று பதயோஜநை. ‘[illegible]’ போதாயந ரென்றும் நீங்கள் ப்ரமாணமாக ஒப்பும் ப்ராசீந வ்ருத்திகாரர் உக்திகளை நீங்கள் வீணே வாயிக்கிறீர்கள்; நாங்கள் அப்படிச் செய்யோம்.’

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபாநு ஹூ மாசி மீ

1உ சனிக்கிழமை	—	கும்ப ஶுக்ல நவமி திதி. திருக்கச்சி நம்பி திருநக்ஷத்ரம்
5உ புதன்கிழமை	—	குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்
8உ சனிக்கிழமை	—	ப்ரதமை திதி. மாசி மகம்
9உ ஞாயிற்றுக்கிழமை	—	த்விதியை திதி
15உ சனிக்கிழமை	—	அஷ்டகா ச்ராத்தம்
16உ ஞாயிற்றுக்கிழமை	—	அந்வஷ்டகா ச்ராத்தம்
23உ ஞாயிற்றுக்கிழமை	—	ப்ரதமை த்விதீயை திதி த்வயம்
24உ திங்கட்கிழமை	—	த்ருதீயை திதி
29உ சனிக்கிழமை	—	அதிதி

[கும்ப ஶுக்ல அஷ்டமி திதி—பங்குனிமீ 1உ ஞாயிற்றுக்கிழமை திநம்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர் திருப்பாப்புலியூர்.]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 1 : பக்கம் - 17 தொடர்ச்சி]

இப்படி, தேவர்களுக்கு உஷ: காலமென்று சாஸ்த்ர ஸித்தமான மார்கழி மாதத்தில், அதைத் தன் ஸ்வரூப விபூதியாகக் கூறிய விபூதிமானை அர்ச்சிப்பதாகிற தமது வ்ரத விசேஷத்துக்குக் கால குணத்தாலும் உத்தேஶ்ய தேவதா குணத்தாலும் ஏற்பட்டிருக்கும் வைலக்ஷண்யத்தையும் அதனால் பரம பலஸித்தி ஹஸ்தகதமென்பதையும் கூறி, நீராட்டத்துக்குப் புறப்பட்ட தோழிமார்களை அபிமுகர்களாக்கிப் பிறகு தமது ஆரம்பம் மாசற்றதென்றும், அது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே யென்றும், பெரியோர்கள் சென்ற வழியைத் தாம் சிறிதும் தவறவில்லை யென்றும், உலக மறியவேண்டுமென்று தம் வ்ரதத்தின் அங்கங்களை ப்ரபஞ்சிக்கிறார்.

2. "வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்."

வையத்து வாழ்வீர்காள் !—பூமியில் வஸிப்பவர்களே ! முன் 'பாரோர் புகழ' என்று கூறியதை அநுஸரித்து, உலகத்தின்கண் வாழும் ஸர்வ ஜனங்களும் தம் வ்ரதாநுஷ்டாநத்தின் வரலாற்றை அறியட்டு மென்று கருத்து. இதனால், 'ஸர்வலோக ஸாக்ஷிகமாக நாம் வ்ரதாநுஷ்டாநம் செய்கிறோம்; இதில் பிறருக்குத் தெரியாவண்ணம் மறைக்க வேண்டிய அம்சம் ஒன்றுமில்லை' யென்பது விளங்குகிறது. இந்தக் காரணத்தைக்கொண்டும், க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்தைத் தங்கள் மநஸ்ஸில் ரஹஸ்யமாய் வைத்துக்கொண்டு வ்ரதாநுஷ்டாநம் செய்த கோப கந்யகைகளைக் காட்டிலும் வைலக்ஷண்யம் ஏற்படுகிறது. முன் பாசுரத்தில், 'பாரோர் படிந்து புகழப் பறைதருவான்' என்றதால், பகவான் தங்களுக்குப் பல ப்ரதாநம் பண்ணுவது காரணமாக உலகத்தார் 'நாஸௌ ஸ்ரீயா ஜுஷ்டஶிவோபஜீவிந:' என்கிற கணக்கில் தங்களை ப்ரசம்ஸிப்பார்கள் என்று கூறியதால், அப்படிப் பல ப்ரதாநம் பண்ணும் வரையில் அவர்கள்

ப்ரஶம்ஸைக்கு இடமிராதென்று தோற்றுவதால் அவ்வித சங்கைக்கு ஹேதுவில்லை யென்றும், வ்ரதாநுஷ்டாந காலத்திலேயே எல்லோரும் அதன் மாசற்ற க்ரமத்தைக் கண்டு மெச்சுவார்களென்பதை விளக்குவதற்காகவும், பக்தி யோகாநுஷ்டாநம்போல் அநுஷ்டாதாக்களான தமக்கு இவ்ரதம் அப்போதே ஸ்வயம் புருஷார்த்தமாக அநுபவிக்கத்தக்க தென்பதைக் குறிக்கவும் அதன் அங்கங்களை இங்கு விவரிக்கிறார்.

"𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑍇𑌤𑌰𑍋 𑌜𑌨𑌃 ।
𑌸 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥"

என்கிற கீதா வாக்யத்தில் '𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂' என்பதற்கு '𑌯𑌦𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌂' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் பொருள்கூறிய கணக்கில், ஆண்டாள் தமது வ்ரதத்தின் அங்கங்களை உலகத்தார் தெரிந்து அநுவர்த்திக்கட்டுமென்கிற உதார பாவமடியாக இப்படி விவரித்தார்போலும். இங்கு 'வையத்து வாழ்வீர்காள்' என்றதால், '𑌸𑌞𑍍𑌜𑍋 𑌦𑌾𑌸𑍍𑌯𑍈𑌕𑌜𑍀𑌵𑌨𑌾𑌃' என்றபடி பகவத் தாஸ்யத்தையே தமக்கு ஸத்தாபாதகமாக அத்யவஸித்து வாழும் பரமைகாந்திகள் ஸம்போதிக்கப்பட்டதாகவும் கொள்ளலாம். அப்போது '𑌶𑍁𑌚𑍀𑌨𑍇 𑌤𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌨 𑌸𑌾𑌯𑌂 𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍' என்றபடி '𑌕𑍁𑌶𑌲𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌸𑌂𑌸𑍇𑌨𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌦𑌃' என்கிற ஶ்ருதி வாக்யத்தின்படி ஸத் வ்யபதேஶத்துக்கு உரிமை பூண்ட வாழ்வையுடைய ப்ரஹ்ம ஜ்ஞாநிகளின் பஹுமாநத்தை அபேக்ஷித்து அவர்களை இங்கு ஆண்டாள் ஸம்போதிக்கிறார்போலும். அல்லது '𑌵𑍇𑌶𑌂 𑌵𑌾𑌯𑌨 𑌶𑌾𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍃𑌦𑌯𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌃 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌃 𑌕𑍃𑌤𑌿𑌨𑌃' என்றவாறு ப்ரஹ்ம வித்துக்கள் தமது அநுஷ்டாந பத்ததியை அப்யுபகமம் பண்ணுவார்கள் என்கிற நம்பிக்கையை வெளியிட்டதாகவும் கொள்ளலாம்.

நாமும்—என்பதில் சகாரார்த்தகமான 'உம்' ப்ரத்யயத்தால், 'இது நாம் புதிதாகக் கைக்கொண்டதல்ல; முன்னோர் சென்ற வழியையே பின்பற்றியது' என்பது தோற்றுகிறது. இது பின்னால் 'மேலையார் செய்வனகள்' என்றதால் வ்யக்தமாக்கப்படுகிறது. மேலும்: ப்ரஹ்மசாரிகளுக்கு ஸமாவர்த்தந வ்ரதம்போல் கந்யகைகளுக்கு இந்த வ்ரதம் ஏற்பட்டிருப்பதால், இதற்கும் ப்ரதிநியதமான அங்கவிஶேஷங்கள் உண்டென்பதும் இத்தால் ஸூசிக்கப்பட்டதாகும். இவ்வபிப்ராயம், 'நம் பாவைக்கு' என்று பின்வருவதால் த்ருடீகரிக்கப்படுகிறது.

நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ:—நம்முடைய வ்ரதத்துக்கு அங்கமாக அநுஷ்டிக்கும் க்ரியாகலாபத்தை நீங்கள் கேட்கவேண்டும். 'கேளீரோ' என்பதில் 'ஒ' என்கிற ப்ரத்யயத்தால், 'நீங்கள் கேட்பது எங்களுக்கு த்ருப்தியைத் தரும்' என்பது ஸூசிக்கப்படுகிறது. இத்தாலும் இவ்ரதாநுஷ்டாந க்ரமத்தின் வைலக்ஷண்யம் த்யோதிதம். அல்லது நாம் செய்யப்புகும் தர்ம மார்க்க ப்ரபஞ்சநத்தை ஶ்ரவணம் பண்ணி உலகத்தோர் உஜ்ஜீவிக்கட்டும் என்று கருத்தாகவுமாம்.

பாற்கடலுள் பையத் துயின்ற பரமனடி பாடி—க்ஷீர ஸமுத்ரத்தின் மத்ய பாகத்தில் அதி ம்ருதுவாய்க் கண்வளரும் பரமாத்மாவின் திருவடிகளை ஸ்தோத்ரம் செய்து. இது 'க்ஷீரஸாகர தரங்க ஶீகராஸார தாரகித சாரு மூர்த்தயே' இத்யாதிகளின்படி க்ஷீரஸமுத்ர சாயியான பகவந் மூர்த்தியை த்யாநம்செய்துகொண்டு பரமைகாந்திகள் யோகம் என்கிற நித்ராஸேவநம் பண்ணும் ஶிஷ்டாசாரத்தை அநுஸரித்ததாகும். 'பாற்கடலுள்' என்று ஸமுத்ரத்தின் மத்ய பாகம் குறிக்கப்பட்டதால், அலைகளின் அசைவில்லாத ஸந்நிவேசம் கூறியதாகிறது. இது நித்ரையின் ஸுகத்துக்கு முக்ய ஹேதுவாகும். 'பைய' என்பதற்கு ம்ருதுவாய் என்று பொருளாகையால், போகி போகமாகிற ஶயநத்தின் மார்த்தவமும் ஸ்தலத்தின் விவிக்ததையும் நிஶ்சலதையும் ஸூசிக்கப்பட்டன. இத்தால், யதேச்சமாய் நிராபாதமான ஸுக ஸ்வாபம் கண்டருளுகிறார் என்பது ஸித்திக்கிறது. 'பரமனடி' என்றதற்கு ஆளவந்தார், 'ஶரண்யம் ஶரண்யதைவதம் தவ பாதாரவிந்தயுகளம் ...' என்ற கணக்கில் 'க்ருதிஷுவம் ஶரணீயம் ஹி வாரணம் மஹார்ணவே' என்கிற ந்யாயத்தை அநுஸரித்து, புகலொன்றிலாத அகிஞ்சநாதிகாரிகளுக்கு எப்போதும் தஞ்சமாய் நிற்பது த்வய மந்த்ர ப்ரஸித்தமான பகவச்சரணாரவிந்தமே என்று தாத்பர்யம். 'பாடி' என்றதால், 'நிவ்ருத்த தர்ஷைருபகீயமாநாத்' என்றபடி ஸ்தோத்ர விஷயபூதமான திருவடிகளின் போக்யத்வமும், அவைகளை ஸ்தோத்ரம்செய்வதில் ஸ்தோதாவுக்கு ஏற்படும் ஸுகாநுபவமும், மெய்ம் மறந்த உத்ஸாஹமும் குறிக்கப்படுகின்றன. பாட்டு அறியாதவர்கூட விஷய ஸ்வாரஸ்யத்தால் பாடத் தொடங்குகிறார்கள் என்று கருத்து. 'உபஶ்லோக்யஸ்ய மாஹாத்ம்யாதிவர்ணநா: காவ்யஸம்பத:' என்றபடி உத்தம ஶ்லோக குணாநுவாதத்தில் ப்ரவ்ருத்தித்த அகவிகள்கூடக் கவிகளாய் விடுகிறார்கள் என்றும் தாத்பர்யம் கொள்ளலாம்.

இப்படி, கர்த்தவ்யமான வாசிக வ்யாபாரத்தைக் கூறிப் பிறகு வர்ஜநீயாம்ஶத்தைக் கூறுகிறார் 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' என்று. இத்தால் வ்ரதாங்கமான ஆஹாரநியமம் விதிக்கப்பட்டது. இதுவும் ஸ்ரீபாகவதத்தில் 'போஷ்யவிஷ்யம் ஹம்ஜாநா:' என்றதை அநுஸரித்ததாகும். 'உண்ணோம்' என்கிற தன்மை எதிர்மறையால், 'நமக்கென்று போகபுத்தியுடன் எதையும் கொள்ளமாட்டோம்' என்று தாத்பர்யம். இங்குக் குறிப்பிட்ட இரண்டுபோக வர்ஜநமும் போகாந்தர வர்ஜநத்துக்கு உபலக்ஷணமாகும். கைமுதிக ந்யாயத்தாலும் இது ஸித்திக்கும். வஸ்தாவதா: வ்ரதாரம்ப திநத்துக்கு முன்னிரவில் அநுஷ்டிக்கவேண்டிய நியமம் கூறப்பட்டதாகக் கொள்ள ப்ராப்தம். ஸ்ரீமத் ராமாயணத்தில் சக்ரவர்த்தித் திருமகன் பட்டாபிஷேகத்துக்கென்று சக்ரவர்த்தி கோரிய நாளுக்கு முன்னிரவில் ஆசார்ய நியமநத்தை அநுஸரித்து,

" ஶேஷம் வ ஹவிஷஸ்ஸஸ்ய ஸாஸ்ராஸாஸ்ராத்மநஃ ஸ்ரியஃ |
ஸ்ராயணாராயணம் தேவம் ஸ்வாஸ்தீணை கூஶஸம்ஸ்தரே ||
வாக்யதஸ்ஸஹ வைதேஹ்யா ஸக்வா நியதமாநஸ : |
ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோஃ ஶிஶ்யே நரவராத்மஜஃ ||"

என்றபடி நியதாஹாரராகப் பகவானை த்யானித்துக்கொண்டு ஶயனித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படிருப்பது இதற்கு உதாஹரணமாகும்.

நாட்காலே நீராடி—வ்ரதத்துக்கு முக்யாங்கமான ஸ்நாநம் கூறப் படுகிறது நாட்காலே நீராடி=விடியற் காலத்தில் ஸ்நாநம் செய்து. வ்ரத நியமங்கள் கூறப்பட்டிருக்கும் ஆநுபூர்வியை உத்தேசித்து ஸ்நாநத் துக்கு முன் குறிக்கப்பட்டவை, முதல் நாள் இரவில் அநுஷ்டிக்கத்தக்கவை என்று கொள்வது யுக்தமாகும். அநந்தரம், ஸ்நாநம் செய்த பிறகு தேஹாலங்கரண விஷயத்தில் வர்ஜநீயாம்ஶத்தை ப்ரஸ்தாவிக்கிறார் :

மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்— கண்களில் மை யிடமாட்டோம்; குழலில் புஷ்பம் தரிக்கமாட்டோம். குமாரர் களுக்கு ப்ரஹ்மசர்ய வ்ரத ஸ்தாநத்தில் குமாரிகைகளுக்கு இது ஏற்பட் டிருப்பதால், தம் தேஹத்தின் ஸௌந்தர்யத்தையும் போக்யத்தையையும் போஷித்துப் பதியின் ப்ரீதியை வளர்ப்பதற்காக அமைந்த அலங்காரங் களை இப்போது கைக்கொள்ளத் தகாதென்று கருத்து.

செய்யாதன செய்யோம் — செய்யத் தகாதவைகளைச் செய்ய மாட்டோம். கிம்வஹுநா 'இம்மாதிரியான வ்ரதாநுஷ்டாந நியமத் துக்கு எந்தெந்தக் கார்யங்கள் வர்ஜநீயமென்று ஶாஸ்த்ரங்களாலும் ஶிஷ்டாசாரத்தாலும் ஏற்பட்டிருக்கின்றனவோ, அவைகளொன்றையும் செய்யமாட்டோம்' என்பது கருத்து. இத்தால் காயிக வ்யாபாரத்தில் வர்ஜநீயாம்சத்தைச் சொல்லிப் பிறகு வாசிக வ்யாபாரத்தில் நிஷித்தத் தைக் குறிக்கிறார்.

தீக்குறளைச் சென்றோதோம் — பிறருக்குத் தீங்கு விளைக்கும் கலஹ வார்த்தைகளை யாரிடமும் சென்று பேசமாட்டோம். அயலா ரைப் பற்றிக் குறைவாகப் பேசுவது பரிவாத மென்றும் பைசுந்ய மென்றும் இருவகையாக மநுஸ்ம்ருதியில் வகுக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் பரிவாத மென்பது காமஜ வ்யஸநங்களிலும், பைசுந்யம் க்ரோதஜ வ்யஸநங்களிலும் சேர்க்கப்பட் டிருக்கிறது. அவ்வகையில் பிறர்மேல் த்வேஷ மில்லாமலே கேவலம் சாபலத்தால் சொல்லப்படும் கலஹ வார்த்தை பரிவாதமாகும். மற்றொருவர் மேலுள்ள த்வேஷ புத்தி யால் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கவேண்டு மென்றே செய்யும் கலஹம் பைசுந்யமாகும். இவ்விரண்டும் நாம் செய்யோ மென்று இங்குக் கருத்து. இரண்டும் பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் ஸ்வபாவமுள்ளவை யாதலால், தீக்குறள் என்று சேர்த்துக் குறிக்கப்பட்டன. 'சென்று' என்பதால் கலஹம் செய்பவர்கள் ஒருவரிடம் சென்று, பிறருக்குத் தெரி

யாமல் தனிமையான ஸந்தர்ப்பத்தில் அவர்களுடன் கலந்து பேசும் உலக நடை குறிக்கப்பட்டது. அதற்கு அநுகுணமாகவே 'ஓதோம்' என்கிற பதமும் ப்ரயோகிக்கப்பட் டிருக்கிறது. மந்த்ரத்தை உபதேசிப்பது போல் ரஹஸ்யமாய்ப் பேசுவது, இதனுல் பரிஹாஸ கர்ப்பமாய் ஸூசிக் கப்படுகிறது. 'செய்யாதன செய்யோம்' என்று பொதுவாகக் குறித் திருந்தும் இதைத் தனியாக எடுத்ததற்குக் காரணம், பிறருக்குத் தீமை விளைவிப்பதால், இதனுல் ஏற்படும் ப்ரத்யவாயம் மிகுந்ததென் று உணர்த்து வதற்கும், கலஹ வார்த்தை பேசுவதில் ஸ்த்ரீகளுக்கு அதிகமான ஆஸக்தி யிருப்பது பற்றி அதற்குச் சிறிதும் இடங்கொடுக்கலாகா தென்று தடுப்ப தற்காகவு மென்று கண்டுகொள்ளவும். இது மற்ற வாசிக நியமங்க ளுக்கு உபலக்ஷணமாக இருக்கும். இப்படி நிவர்த்திக்க வேண்டிய வைகளைக் கூறிப் பிறகு கைக்கொள்ள வேண்டியதைக் குறிக்கிருர்.

ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி—ஐயம் என்பது அபக்வ த்ரவ்யத்தையும், பிச்சை யென்பது பக்வாந்நத்தையும் குறிக்கும். அந்தந்த அதிகாரிக்குத் தகுந்தபடி, அதாவது: ப்ரம்ஹசாரி, ஸந்யாஸி முதலியோருக்குப் பிச்சையும், மற்றவர்களுக்கு ஐயமும், ஆந்தனையும்-இய ன்றளவும், கைகாட்டி-நம் கையால் கொடுத்து. இத்தால் '𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌦𑍇𑌯𑌮𑍍 𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌅𑌦𑍇𑌯𑌮𑍍' என்கிற ஶ்ருதியின் உபப்ரஹ்மஹணமாக ஸ்ரீமத் ராமாயணத்தில் '𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌨 𑌤𑍁 𑌹𑍇𑌲𑌯𑌾' என்று கூறப்பட்ட தாநநியமம் அநுஸரிக்கப்பட்டது வெளியாகிறது. இதனுல் வ்ரதாங்கமாகக் கர்த்தவ்யமான காயிக வ்யாபாரம் பேசப் பட்டது. இதை மற்றுமுள்ள ஶாஸ்த்ரீய கர்மங்களுக்கும் உபலக்ஷணமாகக் கொள்ளத்தகும். பிறகு இந்த வாசிக காயிக ரூபமான அங்க கர்மங் களுக்கெல்லாம் அங்கி பூதமான மாநஸ கர்ம விஶேஷம் கூறப்படுகிறது.

உய்யுமாறு எண்ணி—உய்யுமாறு - நாம் உஜ்ஜீவிக்கும் வண்ணம்; அதாவது: நமக்கு மநோநைர்மல்யமும் ஜ்ஞாந விகாஸமும் ஆநந்தமும் ஏற்பட்டு ஆத்மோஜ்ஜீவநம் ஸித்திக்குமாறு எண்ணிப் பகவானை நிரந்தர மாய் த்யாநம் செய்து. இதற்கு, 'ப்ரயோஜநாந்தர கந்த மன்றிக்கே பக வானை ஸ்வயம் ப்ரயோஜநமாய் த்யாநம் செய்து அதனுல் நாம் நற்கதி யடைவோம்' என்று தாத்பர்யம்.

உகந்து—இவ்விதமான நிரந்தர த்யாநத்தினுல் ஏற்படும் நிரதிசய மான ஆநந்தத்தை அநுபவிப்போம்.

ஏல் ஓர் எம்பாவாய்—என்பதற்கு முன் போலவே பொருள். முத லில், 'பாற்கடலுள் பையத் துயன்ற பரமனடி பாடி' என்றது, இரவில் சயனித்துக் கொள்ளும்போது செய்யும் அநுஸந்தாந ப்ரகாரத்தைக் குறித் தது. இப்போது, 'உய்யுமாறெண்ணி யுகந்து' என்பது பகலில் யோக்ய மான காலங்களில் செய்யும் பகவத் த்யாநாதிகளை நிர்த்தேசிக்கிறதென்று விவேசிக்க ப்ராப்தம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்துதி

[ஸ்ரீ. உப. வித்வான் அநந்தாசார்யர், மலையாங்குளத்தூர்]

லோகாந் கர்மசிதாந் பரீக்ஷ்ய நிதராம் நிர்வேதவாந் ப்ராஹ்மணோ
நாஸ்த்யேவாக்ருதக: க்ருதாதிதி ஹி தத்விஜ்ஞாநாய மத்வா குரும் |
ப்ரஹ்மிஷ்டம் ஶ்ருதவேதமௌலி ஸஸிக தத்வேஷு ப்ரவீணேஷு யஸ்ய
ஸங்கம் ப்ராப்ய யதா ஸ்வயம் போதவிஷயம் தம் ஸ்ரீந்ருஸிம்ஹம் பஜே || 1.

[இதன் பொருள்] அஸ்திர பலன்களைத் தரும் யாக தானாதி கர்மங்களால் நிறைந்த இந்த ப்ரபஞ்சங்களை ஶாஸ்த்ரங்களால் ஆராய்ந்து கண்டறிந்து, அஸ்திர கர்மங்களால் நித்யமான ப்ரம்ஹம் கிடைக்காதென்று அந்த நித்யமான ப்ரம்ஹத்தைத் தெரிந்துகொள்வதற்காக வேத வேதாந்தங்களைக் கசடற ஆசார்ய முகத்தால் நன்ருய் அறிந்து, அதற்குத் தக்கபடி ப்ரம்ஹவித்யா நிஷ்டனன ஆசார்யனை உபஹாரத்துடன் கூடியவனுய்க் கிட்டுகிருன் எவனே, அவனுக்கு இந்த ஆசார்யன் ஶாஶ்வதமாய் ஸித்தமான எந்தப் பொருளை உபதேசிக்கிருனே, அப்படிப்பட்ட ஸித்த ப்ரம்ஹமாய்ப் பர வ்யூஹாதி பேதத்தால் பஞ்சப்ரகாரமாய், அதிலும் அர்ச்சா ரூபத்தால் எல்லோராலும் அறியக்கூடியவனுய், ஆஶ்ரித ரக்ஷணத்துக்காக அக்ரஹாரங்கள் தோறும் எழுந்தருளி, தம் அர்ச்சா ஸமாதியை விடாமல் தம் அந்தரங்கர்களாய்த் தம்மை நித்ய ஸேவை செய்யப் பரிவ்ராட் ரூபம் தரித்த நித்யஸூரிகளான ஆசார்யர்களாலே தத்வஹித புருஷார்த்தங்களைப் போதிப்பித்து, அறிவில்லாதவர்களும் ஸுலபமாய் அறியும்படி அவர்கள் செய்யும் உபதேசத்தால் அறிவு பிறந்த எல்லாப் பக்தர்களுக்கும் போத விஷயனை அந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பஜநம் செய்கிறேன்.

வேதாந்தாஸ்ஸுரதிர்யங்மநுஜஸ்தாவராகாரஸம்ஹாஜோத்பவம்
ஸ்ருஷ்டிஸ்த்யவஸாநகாரணதயா ப்ராஹுர்யதேகம் பரம் |
ஸர்வஸ்யாத்மதயா ஸ்திதம் ஸகலசிதசித்வ்யாப்ய ஸர்வாத்மகம்
ஸத்யம் ஜ்ஞாநமநந்தமித்யபிஹிதம் தம் ஸ்ரீந்ருஸிம்ஹம் பஜே || 2.

[இ - ள்.] வேதாந்தங்கள் எந்த பரப்ரம்ஹத்தைத் தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவர ரூபத்தை யடைந்த இந்த ப்ரபஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களுக்குக் காரணமா யிருப்பதாயும், இந்த சித் அசிதாகார

புவனத்தைக் காட்டிலும் வேறுபட்டதா யிருப்பதாகவும் சொல்லுகின் றனவோ, அப்படிப்பட்டவனும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய ஸ்வாபாவிக குணஷ்டகங்களுடையவனும், ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் என்றும் சொல் லப்படுகிற பரப்ரஹ்மமான ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பஜநம் செய் கிறேன்.

𑌯𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌖𑌿𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑌣𑍋 𑌨𑍈𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌤𑍁𑌂 𑌕𑍍𑌷𑌮𑍋
𑌹𑍇𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌸𑌯𑍁𑌤𑌾 𑌤𑌥𑌾𑌨𑍁𑌮𑌿𑌤𑌿𑌰𑌪𑍍𑌯𑍇𑌨𑌂 𑌨 𑌮𑌾𑌤𑍁𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 |
𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌾 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌣𑍀𑌯𑌮𑌲𑌂 𑌤𑍍𑌵𑍇𑌕𑍈𑌵 𑌯𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌮𑌾
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌕𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑍍𑌯𑌨𑌿𑌜𑌵𑌿𑌭𑌵𑌂 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ‖ 3.

[இ - ள்.] எந்தப் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை, எப்படிக் கண் முதலிய இந்த்ரியங்கள் ஸாக்ஷாத்கரிக்க ஶக்தியற்றவைகளோ, அதே ப்ரகாரத்தில் ஆபாஸ ஹேதுக்களோடுகூடிய அநுமாநமும் ஸாதிக்க ஶக்தியற்றது. அவனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை ஸாதித்துக் கொடுப்பதில் தோஷ ஶூந்யமான உபநிஷத் ஒன்றே வல்லமையுடையது. அப்படி ஶாஸ்த்ர மொன்றாலேயே அறிவித்துத் தரக்கூடியதன் மஹிமை களையுடைய பரப்ரம்ஹமான ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பஜநம் செய் கிறேன்.

𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑍇𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑌾𑌰 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌭𑍂𑌯𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌮𑍌𑌲𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇
𑌯𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌧𑌯𑌾 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌪𑍁𑌮𑌰𑍍𑌥𑍋 𑌮𑌤𑌃 |
𑌯𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌸𑍇𑌵𑌨𑌂 𑌵𑌿𑌤𑌤𑌧𑌿𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑍁𑌮𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃
𑌸𑌰𑍍𑌵𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌰𑍂𑌪𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌤𑌂 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇‖ 4.

[இ - ள்.] எந்த மஹா புருஷன் ஸகல புருஷார்த்தங்களுடைய ஸாராம்ஶமாக வேதாந்தங்களால் ஒன்று சேர்ந்து ஸ்தோத்ரம் செய்யப் படுகிறானோ, எந்த மஹா புருஷனுடைய ஸாக்ஷாத்காரம் யோகத்திலோ அர்ச்சாதிகளிலோ ஶ்ரேஷ்டமான புருஷார்த்தமாக எண்ணப்படு கிறதோ, நித்ய விபூதியில் எவன் திருவடிகளில் ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யம் செய்வது பரம புருஷார்த்த மாக சுத்தாந்த ஸித்தாந்திகள் தெரிந்துகொண் டிருக்கிறார்களோ, அப் படிப்பட்ட பொருந்திய ஸகல புருஷார்த்தங்களாக ஶ்ருதி ஸ்ம்ருதிக ளால் சொல்லப்பட்ட மஹா புருஷனாகிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பஜநம் செய்கிறேன்.

𑌸𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌗𑌣𑌵𑌿𑌵𑌾𑌦𑍋𑌽𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌾𑌵 𑌗𑌵𑍇𑌕𑍍𑌷𑌣𑌂
𑌗𑍁𑌣𑌵𑍈𑌶𑍍𑌯𑍋𑌤𑍍𑌯𑌹𑍇𑌯𑌸𑌾𑌧𑌨𑌾𑌦𑍍𑌵𑌿𑌭𑌵𑍋𑌽𑌸𑍍𑌯 𑌬𑍋𑌧𑌾𑌵𑌹𑌃 |
𑌸𑍍𑌵𑌾𑌪𑍋𑌦𑍍𑌵𑍀𑌯𑌵𑌚𑌃 𑌕𑌾𑌰𑌣𑌵𑌚𑌃𑌸𑍍𑌵𑌨𑍍𑌤𑍍𑌰 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌵𑌾
𑌨𑍃𑌤𑍍𑌰𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑌸𑍍𑌯𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑌂 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ‖ 5.

[இ - ள்.] ஸச்சப்தத்தால் சொல்லப்படும் தன்னிடத்தில் ஸங்கல்பம் என்னும் குணம் இருப்பதால் ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறு பட்டவனையும், மேலும் ஆத்மாவென்றும் சொல்லப்படுகிறபடியால் முக்ய மான ஸங்கல்பத்தையுடையவனையும், மோக்ஷத்துக்காக உபாஸகர்களால் த்யாநம் செய்யப்படுகிறவனையும், தன்னை அறிவதினால் அவர்களுக்கு எல்லா வஸ்துக்களுடைய ஜ்ஞாநத்தைத் தருகிறவனையும், எல்லாச் சேதநர்களுடைய தூக்கத்திற்கும் அதினின்று விழிப்பதற்கும் ஸ்தாநமா யிருப்பவனையும், வேதத்தில் இதர சாகைகளிலும் இந்த சாந்தோக்யத்தில் மேல் பாகத்திலும் காரணவாதி வாக்யங்களில் சொல்லப் பட்டிருப்பதால் ஸச்சப்தவாச்யனும் ஜகத்காரணனுமான அந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பஜநம் செய்கிறேன்.

> யத்³ப்³ரஹ்மாண கு³ணேஷு ஶாந்தவிஶேஷாநந்தை³கம் கு³ணம்
> ஶ்ரேய:ஶ்ராவி ஶதா ஹர்ஷ ஶதக இதி தம் ப்³ரஹ்மாந்தமாவ்ருத்திஷு ।
> தத்³யஸ்ய க்வஸ்ய ந வா புநர்விப²லத்வஸாத்³ருஶ்யாநந்த³கம்
> ஸ்வாநந்த³ஸ்வரூப தா⁴திஸாவகம் தம் ஶ்ரீந்ருஸிம்ஹம் ப⁴ஜே ॥ 6.

[இ - ள்.] வேத புருஷன் எந்த மஹா புருஷனுடைய எல்லையில்லாத கல்யாண குணங்களில் ஆநந்த மென்னும் ஒரு குணத்தை அளவிட்டுத் துதிக்க விரும்பி 'ஶதக:' என்று ஆரம்பித்து, மனிதன் துடங்கி ப்ரம்ஹா பர்யந்தமாய்த் திரும்பித் திரும்பி ஆவ்ருத்தியை நன்றாய்ச் செய்து இதுவரையிலும் அந்த ஆநந்த குணத்தின் எல்லையை அடையவில்லையோ, அப்படிப்பட்ட ஆநந்த ஸ்வரூபனும், ஆநந்தத்தால் நிறைந்தவனும், தன் ஆஶ்ரிதர்களுக்கு விசேஷமான ஆநந்தத்தைத் தருகிறவனும், இவை போன்ற எல்லாக் குணங்களும் நிறைந்தவனுமான மஹா புருஷனை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைப் பஜநம் செய்கிறேன். [தொடரும்]

ஸ்ரீ:

பாதூரில் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரம்

இப்பவும் நாளது சித்ரபானுஸ்ரீ தைமீ 21வ புதன்கிழமை (3—2—43) உத்திராட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ அஹோபில மடம் 42-வது பட்டத்தில் மூர்த்தா பிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய **64-வது திருநக்ஷத்ர** மஹோத்ஸவம், பாதூரில் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனுடைய பிருந்தாவனத்தில் வழக்கம்போல் நடக்கிறபடியால் ஆஸ்திக மஹாஜனங்கள் ஷை மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ அழகியசிங்கருடைய அநுக்ரஹத்திற்குப் பூர்ண பாத்ரராகும்படி பிரார்த்திக்கிறோம்.

—பாதூர் ஸந்நிதி ஶிஷ்யர்கள்.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வாகீஶ ஸம்யமினே நம:

ஸ்ரீ அழகிய சிங்கர் பஞ்சரத்னம்

[ஸ்ரீ. உப. வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பெங்களூர்.]

பஞ்சரத்னமாவது, ரத்னம்போற் சிறப்புடைய ஐந்து பாசுரங்கள். இவை ஸ்ரீ அழகிய சிங்கரை ப்ரதிபாதிப்பதால், இவற்றுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் பஞ்சரத்னமென்று மகுடம் சாற்றப்பட்டது. இந்தப் பாசுரங்களில், ஒரு ராஜாதி ராஜனுடைய முன்பு, வந்தியாயிருப்பான் விஜய சப்த புரஸ்ஸரமாக அவருடைய சேவகமே ஏத்தி நிற்கும் முறையில் சிஷ்ய கோடிகளாயிருக்கும் அடியோங்கள் ஸ்ரீ அழகிய சிங்கரைப் போற்றி நிற்கும் நிலை வர்ணிக்கப்படுகிறது

இந்த ஐந்து பாசுரங்களில் முறையே ஐந்து அர்த்தங்கள் ப்ரதி பாதிக்கப்படுகின்றன.

முதல் பாசுரம்: ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸ்ரீமத்வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர பிருதங்களும் பொருந்தியிருப்பதையும், இரண்டாவது பாசுரம்: இதற்குக் காரணமான ஸதாசார்ய ஸம்பந்த லாபத்தையும், மூன்றாவது பாசுரம்: இதன் கார்யமான ஸர்வலோக பூஜ்யத்வத்தையும், நாலாவது பாசுரம்: ஸ்ரீ அழகிய சிங்கருடைய கல்யாண குண கண ஸம்ருத்தியையும், கடைசிப் பாசுரம்: ஸ்ரீ அழகிய சிங்கர் அலங்கரித்தருளும் ஆஸ்தானத்தின் ஸர்வோத்க்ருஷ்டத்வத்தையும் ப்ரதிபாதிக்கின்றன.

1. திருவிளங்கும் வேதநெறி நிலைநிறுத்துந் தேசிகர்தந் தேவேமெய்ம்மை
   உருவிளங்கு பரமஹம்ஸ ஓங்கியசீர்த் துறவோனே யோப்பில்கீர்த்திப்
   பேருவிளக்கே தந்திரங்கள் அத்தனையுந் தன்னதெனும் பெம்மானேயெம்
   மிருவிளங்கு மறைமுடிதேர் சீரங்க சடகோபா நின்றருள் போற்றி.

[இ - ள்.] மங்களகரமாயும் ஸர்வோத்க்ருஷ்டமாயும் சோபிக்கும் வைதிக ஸத் ஸம்ப்ரதாயமாகிற மார்க்கத்தை ஸத் தர்க்கத்தால் ப்ரதிஷ்டை செய்யும் ஆசார்யர்களின் ஸார்வபௌமனே! ஸத்யமான தேஜஸ்ஸை யுடையாராய், பரமஹம்ஸ ரென்று நாமத்தை மாத்திரம் வஹித்து அதற்கேற்பச் சிகை யஜ்ஞோபவீதம் த்ரிதண்டம் முதலிய சிந்நங்க ளில்லாத பாஷண்டர்களிலிருந்து விலக்ஷணராய், 'அஞ்சுடர் போன்றிவ ரார்கொல்?' என்னும்படி தேஜோவிசிஷ்டராக எழுந்தருளியிருக்கும் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யனே! தமது கீர்த்தியாகிற பெரிய

தேஜஸ்ஸால் தன்னேரில்லாது ப்ரகாசிப்பவரே! ந்யாய வேதாந்தாதி சாஸ்த்ரங்களென்ன, லௌகிகமான நீதிகளென்ன, எல்லாவற்றிலும் குசலரா யெழுந்தருளியிருப்பவரே! பெரியோரே! உபய வேதாந்தங்களி லும் தேர்ந்திருப்போரே! ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் என்னும் திருநாமத்தால் அலங்கரிக்கப் பெற்றோரே! தேவரீ ருடைய திருவடிகள் ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்கவேண்டும்.

2. அருள்கொடுத்துந் திருமாலா ராங்காங்கே யுறைதருநற் பதிகள்தோறும்
பொருள்கொடுத்தும் பெருவிலையாம் பொற்கலன்கள் மிகக்கொடுத்தும் புவியோர்போற்றத்
தெருள்கொடுத்து மடியார்க்குத் திருமாலார் சரண்கொடுத்துந் தேச மெங்கும்
மருள்கெடுத்தும் விசயஞ்செய் மாசிங்க தேசிகர்தாள் மதிப்பாய்போற்றி.

[இ - ள்.] ஸர்வ லோகத்துக்கும் அநுக்ரஹத்தைச் செய்தும், ஸ்ரிய: பதியான ஸர்வேஸ்வரன் ஆங்காங்கே கோயில் கொண்டெழுந் தருளியிருக்குந் திவ்ய தேசங்கள்தோறு மெழுந்தருளியிருந்து அவ்வோ எம்பெருமான்களுக்கு பஹுத்ரவ்யங்களையும் பஹுத்ரவ்ய ஸாத்யங் களான திருவாபரணங்கள் முதலியவற்றையும் காணிக்கையாக ஸமர்ப் பித்தும், இந்த விதரணையைக் கண்டு ஸ்வசிஷ்யர் அந்யசிஷ்யர் என்னும் வாசியில்லாமல் ஸர்வ லோகத்தாலும் கொண்டாடப்பட்டும், திருவடியில் ஆஸ்ரயித்த மஹான்களுக்கு க்ரந்த காலக்ஷேப மடியாக ஞான ப்ரதானத் தைப் பண்ணியும், ஆத்மோஜ்ஜீவநத்துக்காக த்வரிப்பவர்களுக்கு உபாயாநுஷ்டாநத்தைப் பண்ணி வைத்து அதனடியாகப் பிராட்டியுந் தாமுமாக வாஉதஜெவாஜிதமாக எழுந்தருளியிருக்கும் திவ்ய தம்பதி களின் திருவடிநிழலின்கீழ் அந்தமில் பேரின்பத் தடியார்தம் மிருக்கையை யளித்தும், லோகத்தையெல்லாம் ஆக்ரமித்திருந்த அஜ்ஞாநாந்தகாரத்தை த்வம்ஸம் செய்தும், இப்படி லோகத்துக்கு எல்லா விதமாகவும் உபகாரங் களைச் செய்து மிகுந்த கீர்த்தியோடு திக்விஜயம் செய்தருளிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருவடி யிணையையே, பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மங்காதுஞ் சோராமேயாள்கின்ற பெருமையாக நினைத் துகக்கும் தேசிகனே! தேவரீர் திருவடிகள் ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்கவேண்டும்.

3. புவிபோற்றும் ஸ்ரீலக்ஷ்மீ நரசிம்ம சடகோபன் பொற்றுள்போற்றிக்
கவிபோற்று மகோபிலத்துக் கதிபதியாக் காசினியோர் போற்றிப்போற்ற
அவிபோற்றுந் தேவர்களு மாகாயத் திருந்துநினை யன்பாய்ப்போற்ற
நவைபோற்றுந் தீமனத்தார் நரசிங்க னடிக்காளாய் நின்னைப்போற்ற.

[இ - ள்.] லோகங்கள் பற்பல விதமாகப் போற்றி செய்யும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய அழகிய திருவடியிணைகளைப் பஜித்து, அதனடியாக க்ராந்ததர்ஸிகளாய் ஞானி

களும் பரகாலன் முதலிய செஞ்சொற் கவிகளும் போற்றி செய்யும் ஸ்ரீமதஹோபில திவ்ய தேசம் திவ்யாஸ்தாநம் இவற்றுக்கு அத்யக்ஷதையைப் பெற்றும், ஸர்வ லோகங்களும் கொண்டாடவும், இந்தப் பூதலத்தோரே யன்றி விண்ணுலகில் வானவரும் போற்றி செய்யவும், தேவரீருடைய தேஜோவிசேஷத்தால் தீமையையே ஆதரித்திருந்த பாபிகளும் திருந்தப்பெற்று, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிக்கு ஆட்பட்டுத் தேவரீரைப் போற்றவும்; [இது குளகச் செய்யுள்.]

4. ஆசிரியன் றிருநாம மனவரதஞ் சிந்தித்தாங் கவனுகப்பே
மாசிலதோர் நின்றனது மனக்குகப்பாய் வாழ்ந்திவோய் மாதவத்தோய்
நேசமுடை மனத்தோர்மாட் டருள்பெருக்குங் குணக்குன்றே நிமலா
தேசுடைய தேசிகனே சீரங்க சடகோபா நின்றுள் போற்றி. [ஞானத்

[இ - ள்.] தமது ஆசார்யனுகிய ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருநாமத்தையே தாரக போஷக போக்யங்களாகக் கொண்டு அதை ஸதாகாலமும் த்யாநம் பண்ணியும், அவருடைய திருவுள்ளத்து உகப்பான விஷயங்களே குற்றமற்ற தமது திருவுள்ளத்துக்கும் உகப்பான விஷயங்களாக எண்ணியும், 'தொல்லருள் மாறன் துணையடிக்கீழ் வாழ்வை யுகக்கு மிராமாநுச முனி' என்றபடி ஆசார்யன் திருவடிக்கீழ் வாழ்வே வாழ்வாக மதித்து எழுந்தருளியும், மஹர்ஷி துல்யராயும் எழுந்தருளியிருப்பவரே! தேவரீருடைய திருவடியில் பக்தியைக் கொண்டுள்ள சிஷ்யகோடிகள் விஷயத்தில் அநுக்ரஹத்தைப் பெருக்குகிற வாஹிநீஜநூஸௌஜமாயும் ஹேயகந்த ரஹிதராயும் கல்யாண குண பூயிஷ்டராயும் ஞாநமாகிற தேஜஸ்ஸால் ப்ரகாசிப்பவராயு மிருக்கும் ஆசார்ய ஸர்வ பௌமனே! ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனே! தேவரீர் திருவடிகள் ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்கவேண்டும்.

5. திருமாலார் திருப்பதிகள் நூற்றெட்டிற் றலைமைபெறு மரங்கந்தன்னில்
திருமாலார் அருள்பெற்று மாஸ்தானந் தனைப்பெற்றுந் திக்கெட்டுஞ்சேர்
மருவாருந் துளவலங்கல் மாலோல னடியார்தம் மதிப்புப்பெற்றுந்
திருவாரும் சீரங்க சடகோபா தேசிகனே போற்றி போற்றி.

[இ - ள்.] திவ்யதம்பதிகள் உகந்தருளிய திருப்பதிகள் நூற்றெட்டில் தலைமைபெற்ற திருவரங்கத் திருப்பதியில் பகவானுடைய அநுக்ரஹத்தைப் பெற்றும், ஸ்ரீமதஹோபில மஹாஸ்தாநத்தின் அத்யக்ஷத்வத்தைப் பெற்றும், எல்லாத் திசைகளிலும் கீர்த்தியோடு விளங்குகிற ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவடிகளா யுள்ளார்களான மஹான்களுடைய பஹுமாநத்தைப் பெற்றும் பொலிவு பெற்று விளங்குகிற ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனே! தேவரீர் ஸர்வோத்க்ருஷ்டராக விளங்கவேண்டும்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमदहोबिलमठीयसंस्कृतमहाकलाशालाया नूतनगृहप्रवेशमहोत्सवे श्रीमद्वेदमार्गेत्यादिबिरुदवृन्दविभ्राजितानां तत्रभवतां श्रीलक्ष्मीनृसिंह दिव्यपादुकासेवकश्रीवण्शठकोपश्रीश्रीरङ्गशठकोपयतीन्द्रमहादेशिकानां सन्निधौ समर्प्यमाणा

॥ अभिनन्दनपत्रिका ॥

हे श्रीर्नित्यं निधेयास्तव नतसुभगम्भावुकान्दृग्विलासान्
योगीन्द्रे रङ्गपृथ्वीशठजिति विबुधश्लाघनीयात्मशीले ।
येनोदारेण सम्प्रत्यरचि शुभधिया दर्शनत्राणहेतो-
र्विद्याशालेति लक्ष्मीं प्रति रहसि भणन् पातु पुँस्केसरी नः ॥

आम्नायान्तोपदेशैरपहततमसां प्रीतिहेतोर्बुधानां
ज्योत्स्नामन्यां विशुद्धां प्रथयति सदयो यो नृसिंहप्रियाख्याम् ।
विद्याशालां यतीन्द्रो वकुलवनपुरे स्थापयन् कृष्णतुष्ट्यै
आचार्येन्दुस्स जीयाच्चिरमिह वकुलस्रग्धरो रङ्गपूर्वः ॥

'यस्मिन्रङ्गशठारियोगिनृपतौ भद्रासनं भेजुषि
स्मृत्याश्लेषसुखानुभूतिवशतो वेदो न वेदापरम् ।
पौराणी च गिरां विभूतिरयते प्रामाण्यमव्याहतं
तस्मै देशिकसत्तमाय कलिता सौवागतव्याहृतिः ॥

श्रुतिनयविदस्सौम्या नारायणार्यवरास्स्वतो
भविकचरिता यस्यामध्यक्षतामधिकुर्वते ।
यतिकुलपतेरेषा विद्यास्थली शरदश्शतं
प्रगुणमतिभिस्सद्भिर्विद्यार्थिभिस्सुखमेधताम् ॥

सत्कर्म शास्त्रधियमद्भुतसिंहपाद-
भक्तिप्रकर्षमपि साधुकुले दुहाना ।
श्रीरङ्गभूवकुलभूषणदेशिकेन्द्र-
विद्यास्थली भुवि चिराय चकास्तु कीर्त्या ॥

भक्तप्रह्लाददुःखव्यपनयनकृते स्तम्भतो जृम्भमाणो
योऽरक्षीत्प्राक् तमेकं दनुतनुजमहामत्तनागं निरस्य ।
सर्वान् स त्रातुकामः प्रतिगृहमुपयन् भावितार्चावतारः
श्रेयो भूयो विदध्यान्नरहरिरनघः पद्मयालिङ्गितो नः ॥

द्वाचत्वारिंशपट्टे नृहरिकरुणया प्राप्तमूर्धाभिषेकः
सङ्कल्पं धर्मवृद्धौ व्यतनुत यतिराड् रङ्गकार्यात्मजोऽसौ ।

कालेऽमुष्मिन् विलुम्पन् कलिकलुषतया प्राक्तनश्श्रौतधर्मो
विद्याशालामुखेन प्रवचनकरणात् पूर्ववत् स्थापनीयः ॥

मधुरान्तकनगरं भुवि सुकराचरणं स्या-
दिह लब्धसदुपदेशक उपयात्यभिवृद्धिम् ।
यतितल्लज इह लक्ष्मणगुरुरात्तसुमन्त्रो
लभते स हि भुवनेष्वनवधिमाशु समज्ञाम् ॥

इति मत्वा कलाशालां स्थापयन् मधुरान्तके ।
भाति श्रीरङ्गशठजित्संयमीन्द्रः शुभाशयः ॥

श्रीमद्रङ्गशठारिसंयमिगुरोः कारुण्यवीक्षोदितं
विद्यामन्दिरमाश्रितश्शुभगुणो नास्तिक्यवैदेशिकः ।
तत्तत्कालकृतोचिताह्निकविधिर्विद्यार्थिसङ्घो महान्
सम्यक्चिन्तितकाव्यशास्त्रनिचयो देदीप्यतां भूतले ॥

मान्यः पुमान् यः पुनरन्तरात्मा मनोरथान् पूरयते समग्रान् ।
दारैरुदारैरुपशोभिताङ्गः प्रसीदतादेष रमानृसिंहः ॥

सुप्रातं दिनमेतदद्य भगवानेष प्रसादोन्मुखः
सिद्धं सम्प्रति नः समीहितमिमे सर्वेऽपि धन्या वयम् ।
यद् भक्त्या चिरकाङ्क्षितं भगवतः श्रीरङ्गकार्यात्मभू-
योगीशस्य निषेवणोत्सवममी साक्षादवेक्षामहे ॥

सत्सङ्गरक्षणमनेकविधांश्च धर्मा-
नाचार्य एव सततं हि मुदा वितन्वन् ।
कृष्णेन तामलघु मध्वरिणा कृतां प्राक्
अन्वर्थयन्निव विभाति किल प्रतिज्ञाम् ॥ ५ ॥

त्रय्यन्तादिषु येन शिक्षितधियः शिष्या त्रिशिष्यादरा-
दश्राव्यन्त रहस्यमर्थमनघो योगीति यो गीयते ।
व्यानम्रेषु निसर्गसिद्धकृपया रम्यः परं यः फलं
दुग्धे सम्प्रति दुग्धसिन्धुदुहितुः पत्युः प्रपत्त्युत्सवैः ॥

क्षेत्रेऽस्मिन्नेव दीव्यन्महिमनि वकुलारण्यनाम्नि प्रशस्यां
विद्याशालां प्रवर्त्य श्रुतिमकुटयुगीमन्ततः श्रावयिष्यन् ।
सन्तुष्टिं सैष विद्यासदनमभिनवं सम्प्रविश्योद्गृणानः
श्रीरङ्गाद्यः शठारिः शतमिह शरदः श्रेयसे नः समिन्धाम् ॥

मधुरान्तकम्
१०-११-१९४२.

इति श्रीमदहोबिलमठीय-संस्कृतमहाकलाशालाप्रवक्तृपरिषत्

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

காரயித்ருத்வ ஸித்தாந்த விமர்சநம்

[மதுராந்தகம் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்யர், திருவாதி]

(ஸம்புடம் 2, ஸஞ்சிகை 1: பக்கம் - 28 தொடர்ச்சி)

நான்காவது ஸஞ்சிகையிற் காணும் ஸாராம்சமாவது :—ஜீவர்களுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் பகவானுக்கு உபேக்ஷகத்வம் சொல்லப்படுகின்றது. உபேக்ஷகத்வமாவது :—(1) அந்தந்த ப்ரவ்ருத்தி காலத்தில் விசேஷப்படியாகத் தடுக்காமலிருப்பதே. (2) இது ஸாதாரணோபகாரகத்வ ரூபம். (3) இந்த ஸாதாரணோபகாரகமாக இருப்பது காரயித்ருத்வம் என்றும் வழங்கப்படும். ஶ்ருதப்ரகாசிகாதி ஸூக்திகளுக்கும் ஸ்ரீ தேசிக ஸூக்திகளுக்கும் இவ்விஷயத்தில் ஸாமரஸ்யமே யுளது என்பதாக. உபேக்ஷகத்வமானது இத்தகையது என்று உதாஹ்ருத ப்ரமாணங்களால் ஏற்படமாட்டாது என்கிறார் இந்த ஸ்வாமி. உபேக்ஷகத்வத்தை இத்தகையதாகவே ஆசார்யர்கள் நிஷ்கர்ஷம் செய்திருப்பதை விளக்குவோம்.

“ப்ரவ்ருத்திகாலே து விஶேஷதோ நிவாரகத்வாபாவரூபமுபேக்ஷகத்வம்” [ரசநாநுபபத்யதிகரண ஶ்ருதப்ரகாசிகை] “ஒன்றிலே ப்ரவ்ருத்தனை சேதநனை விலக்காதவளவில் உபேக்ஷகன்”, “ஈஶ்வரன் க்ஷேத்ரஜ்ஞருடைய விஷம ஸ்ருஷ்டி ஹிதாஹித ப்ரேரணாதிகளில் விசேஷ காரணமன்றிக்கே, அவர்களுடைய கர்ம வைஷம்யம் அவற்றுக்குப் ப்ரயோஜந மாகையால் இவனை உதாஸீநன் என்கிறது.” இவை முறையே சரம ஶ்லோகாதிகாரத்திலும் பரமத பங்கத்தில் பரதத்வாதிகாரத்திலும் உள்ள ஆசார்ய ஸூக்திகள். இவற்றால்: “அந்தந்த ப்ரவ்ருத்தி காலத்தில் விசேஷப்படியாகத் தடுக்காமலிருப்பதே உபேக்ஷகத்வம்” என்று அடியேனுடைய ப்ரதிஜ்ஞையே பரிபாலித மாகின்றமையால், இதன்மேல் குறை கூறுவதற்கில்லை.

2. ஆகிலும் இத்தகைய உபேக்ஷகத்வமானது ஸாதாரண காரணத்வ ரூபமே என்பதாக இரண்டாவது ப்ரதிஜ்ஞையைத் தூஷிக்கலாமே என்று இந்த ஸ்வாமி நினைக்கக்கூடும். இதுவும் ஸித்தாந்த விருத்தமே. “ஸாதாரணோபகாரவிஶேஷோபகாரபேதேந ஸர்வாஸாம் ப்ரவ்ருத்தீநாம் ஸர்வஹேதுகத்வாத்” என்பதாக உள்ள பராயத்தாதிகரண ஶ்ருதப்ரகாசிகையினால், உபேக்ஷகத்வமானது ஸாதாரண காரணத்வ ரூபம் என்று நிர்ணயம் செய்யப்பெற்றிருப்பதை இந்த ஸ்வாமியும் மறுக்கவொண்ணாதே. “தேஹவதேஹவாத்மா ஸஹம்” என்கிற விடத்தில் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகையில் ஆசார்யனும் ஸாதாரண காரணத்வ ரூபமாக உபேக்ஷகத்வத்தை நிஷ்கர்ஷித்துள்ளார். அதாவது: கரண களேபர ப்ரதாநாதி முகத்தாலே ஈசன் ஸாதாரண காரணமாகிறான் என்று ப்ரஸ்தாவித்து, “ஸ தாவதேதவ ஸர்வப்ரவ்ருத்திநிவ்ருத்திஸாதாரணோதாஸீநத்வம் ஸமதே உக்யதே” என்று அருளியிருப்பதே அது. இதையும் இந்த ஸ்வாமி அபலபிக்க முடியாது. ‘ஸாக்ஷிதாத்ரஞ ஸாஹ்யம்’ ‘ததேதோபேக்ஷ’ என்கிற ஸாராவளி தத்வஸார ஸூக்திகளின் வ்யாக்யாநங்களிலும், ரஹஸ்யத்ரய சுளகத்திலும் பின்னிட்ட ஆசார்யர்களும் ஸாதாரண காரணத்வ ரூபமாகவே உபேக்ஷகத்வத்தை வகுத்து வைத்திருக்கிறார்கள்.

3. ஆகிலும் இத்தகைய உபேக்ஷகத்வம் காரயித்ருத்வ ரூபமன்று என்பதாகச் சொல்லிவிட்டால், மூன்றாவது ப்ரதிஜ்ஞையைப் பாதித்தாய் விட்டதே; அது போதுமே என்பது இந்த ஸ்வாமி எண்ணமாகில், இதுவும் வீணேயாகும். ஸ்ரீ தேசிகன் ஜீவருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் உபேக்ஷகத்வமும் அதோடு ஸமகாலத்தில் காரயித்ருத்வமும் இசைந்துள்ளதை ஸம்பாதக ஸ்வாமியும் ஸம்மதித்திருக்கிறார்.

“ஈசோ ஹிதாஹத: ஜீவஸ்ய ப்ரதமப்ரவ்ருத்தாவீச்வர: காரயிதா ந பவதி” இத்யாதியாக ‘ஈத்ருக் ப்ரேரகத்வம் ஸ்யாத்’ என்கிற ஸாராவளி ச்லோகத்தை அவதரிப்பித்து ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் காரயித்ருத்வம் ஈசனுக்கு உண்டு என்று ஸமர்த்தநம் செய்வதாகச் சிந்தாமணியிலும் மற்றுமுள்ள வ்யாக்யாநங்களிலும் காணக் கிடைக்கின்றது. மூலத்தில் ப்ரேரகத்வமே தோன்றினாலும் ‘ப்ரேரகத்வமே காரயித்ருத்வம், வெவ்வேறன்று’ என்று பரமத பங்கத்திலே அருளினமையால், இந்த ஸ்வாமியும், ‘காரயித்ருத்வமானது சிலருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈசனுக்குள்ளது’ என்பதை நிஸ்ஸந்தேஹமாக ஒப்புக்கொள்ளவே வேண்டும். உபேக்ஷகத்வமானது விசேஷ காரணத்வாபாவரூபமாக முன் காட்டிய பரமதபங்க வசநத்தினால் ஸ்பஷ்ட மாகின்றமையால், அதோடு தோள் தீண்டியாக ஒரு க்ஷணத்திலே ஸமவாயம் பெறுமதாகிய காரயித்ருத்வமானது விசேஷ காரணத்வ ரூபமாகமாட்டாது. ஸாமாந்ய காரணத்வ ரூபமே; இதுவே ஸ்ரீ தேசிகாபிமதம் என்பதை உள்ளத்திற் கொள்ளாமலே இந்த ஸ்வாமி ‘காரயித்ருத்வமானது ஸாமாந்ய காரணத்வத்தை விட வேறானது’ என்றும், ‘உபேக்ஷகத்வத்தைப் பற்றி ப்ரபல பாதகமானது காரயித்ருத்வம்’ என்றும், ‘ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈச்வரனுக்கு ப்ரயோஜயித்ருத்வமே யில்லை என்றால் அதனிலும் நெருங்கியதான காரயித்ருத்வத்தைப் பற்றிய கதை என்ன!’ என்றும், பதினோராவது ஸஞ்சிகையில் எழுதிவைத்திருப்பது நிரூபக ஹ்ருத்யமாகுமோ? “யதா லோகே நாநாவிதாநாம் ... ஸாதாரணம் நிமித்தம் பவதி ஏவம் (ததா) ஏவமீச்வரோ நிமித்தகாரணம் காரயதி” என்பதாகப் பராயத்தாதிகரண சங்கர பாஷ்யம். ஸாதாரண காரண மாத்ரமாயிருந்துகொண்டு காரயிதாவாகிறான் ஈசன் என்கிறது. நயமயூக மாலிகையில் ‘ஈசேத்யாஹு:’ இத்யாதியாகப் பக்ஷாந்தரத்தை நிரூபிக்குமிடத்தில், ஜீவருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈசனுக்குக் காரயித்ருத்வ மில்லை என்பதில் ப்ரமாணமில்லை என்று சொல்லி ‘விதி நிஷேத வையர்த்யம் வாராமைக்காகக் காரயித்ருத்வ மில்லை என்று கல்பநம் செய்யவேண்டாவோ!’ என்று சங்கித்துக்கொண்டு, காலாத்ருஷ்டேந்த்ரியாதிகளுக்குப் போலுள்ள ஸாமாந்ய காரணத்வ ரூபமே காரயித்ருத்வ மாகையால் விரோத மில்லை என்று ஸமாதாநம் காண்கின்றது.

10. ஸ்ரீ ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ஜீவனுடைய கர்த்ருத்வத்தை ப்ரஸ்தாவம் செய்து “தத்ஸாபேக்ஷ: பரமேஷ்டி ப்ரேரகம்” என்று அருளியதற்கு “ஸாபேக்ஷ இதி கர்மாத்ருஷ்டாதிவத் ஸாதாரணதயா காரயித்ருத்வமிதி பாவ:” என்பது உபநிஷத் பாஷ்யகாரர் வ்யாக்யாநம். இங்கு காரயித்ருவத்வத்தைச் சொன்னது அஹ்ருதயமானது என்பதாக இந்த ஸ்வாமி ஸாதிக்கப் பார்க்கிறார். இது ஸஹ்ருதயமாகுமோ? ‘ஸாதாரணதயா’ என்பதைக் கூட்டியது கொண்டே காரயித்ருத்வ மென்கிறது உண்மைக் காரயித்ருத்வ மல்ல என்று ஸூசிக்கப்பட்டதாய் விடுகிறதாம்; ஸாதாரணோபகார மென்றும் விசேஷோபகார மென்றும் விபாகம் காண்கிறதே ச்ருதப்ரகாசிகையில். இங்கு ‘ஸாதாரண’ என்றும் ‘விசேஷ’ என்றும் கூட்டியதால், காரணத்வமும் உண்மைக் காரணத்வமன்று என்னலாமோ? விசேஷத: காரயித்ருத்வத்தை விலக்குவதற்காக வன்றோ ‘ஸாதாரணதயா’ என்கிற விசேஷணம்? காரயித்ருத்வத்தின் உட்பிரிவுகளில் ஸாதாரணதயா காரயித்ருத்வ ரூபமான பிரிவைக் காட்டுகிறது இது, ‘கர்மாத்ருஷ்டாதிவத் ஸாதாரணதயா காரணத்வம்’ என்றும், ‘ஸம்ஸ்ப்ருஷ்ட காரயித்ருத்வஸ்யாத்ருஷ்ட ஸாபேக்ஷத்வாத்’ என்றும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருப்பதை அஹ்ருதயம் என்றும் ஔபசாரிகமென்றும் இப்புடைகளிலே இந்த ஸ்வாமி கதஞ்சித் நிர்வஹிக்குமதெல்லாம் அபிநிவேச காரிதமே யன்றி ப்ராமாணிகமாகாதென்பதை ஸஹ்ருதயர் அறிவார்கள். ஹேது கர்த்தாவின் (ப்ரயோஜக கர்த்தா) வ்யாபாரத்தைப் போதிக்கும் ‘ணிச்’ ப்ரத்யயம் என்றிவ்வளவே சப்த சாஸ்த்ர ஸம்மதம். அஸாதாரண ஹேது கர்த்ரு வ்யாபாரத்தில்தான் அந்த ப்ரத்யயம் என்று நியமிக்கவில்லை. ஆகவே காலாத்ருஷ்டாதிகளைப் போல் ஈசனையும் ஸாமாந்யத: காரயிதா என்பதில் வ்யாகரண விரோதமு மில்லை.

மேலும் ப்ரதம ப்ரவ்ருத்தியில் உபேக்ஷகத்வத்தையும் காரயித்ருத்வத்தையும் ஒரே க்ஷணத்தில் இசைகிறார் ஆசார்யன். உபேக்ஷகத்வமாவது:—"ஹிதாஹித ப்ரேரணாதிகள் விசேஷ காரண மன்றிக்கே ஸாமாந்ய காரணமாகை." இத்தகைய உபேக்ஷகத்வத்தோடு ஸமகாலத்தில் இசையப்பெறும் காரயித்ருத்வமானது ஸாமாந்ய ரூபமேயன்றி வேறு விதமாகாது. விசேஷ காரணமாகையும் அஃது அன்றியில் நிற்பதும் ஏகக்ஷணத்தில் ஸமவாயம் பெறமாட்டாவே. ஆகவே ஸாமாந்யத: காரயித்ருத்வத்தை ஸ்ரீதேசிகன் இசைந்திருப்பது மறுக்கவொண்ணாமையால், உதாஹ்ருத ந்யாயஸித்தாஞ்ஜந ஸ்ரீஸூக்தி தத்வ்யாக்யாநங்களுக்கு ஸ்வரஸார்த்த பரித்யாகமும் அஸ்வரஸார்த்த ஸ்வீகாரமும் செய்வதுமாத்ரமே இவருக்குப் பலித்தது. இதனால் இவருக்கு இஷ்டஸித்தி யொன்றுமில்லை. காலாத்ருஷ்டாதிகள் ஸாமாந்ய காரணங்களாகச் செய்தேயும், அவற்றில் ஸாமாந்ய காரயித்வ வ்யவஹாரமுண்டு என்பதற்கு மேற்கோளாக இந்த ஸ்ரீஸூக்தியை யாம் உதாஹரித்துள்ளோம். அவற்றைக் காரயிதாக்கள் என்று எவரும் சொல்வதில்லை என்கிறார். இவ்வுதாஹரணமே போதுமன்றோ அவற்றுக்குக் காரயித்ருத்வம் உண்டு என்பதற்கு? 'விஷயவஸஹியஸ்வ ஹேமாஹ்ருஷ்டஸ்வாஹகாரித:' என்பதாகப் பராயத்தாதிகரண ஸ்ருதப்ரகாசிகை. அத்ருஷ்டத்திற்குக் காரயித்ருத்வ மில்லாவிடில் அதனால் காரிதம் என்றது கூடுமோ? காரயிதாவினாலே யன்றோ காரித மாகும்? மேலும் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் அத்யந்தோபேக்ஷண மென்பதற்கில்லை; "ஸாக்ஷாத்ஸ்வதந்த்ரஸ்யைவ ந ஸர்வேஷாம் நாஹிதஸ்வஸ்வவ்யாவ்ருத்திநிவாரணஸ்ய க்ருதகத்வாத்" என்கிற ஸ்ருதப்ரகாசிகா வாக்யத்தினாலும் அஹிதப்ரவ்ருத்தி நிவ்ருத்தியில் ஸாமாந்யத: காரயிதா ஈசன் என்று ஏற்படுகின்றது. இதனை விளக்குகின்றோம். ஆஜ்ஞாபயித்ருத்வமும் உபதேஷ்ட்ருத்வமும் ப்ரயோஜயித்ருத்வத்தின் உட்பிரிவுகள் என்பதை ஆசிரியர் தாமே காட்டியிருக்கின்றார். சாஸ்த்ரமானது ஆஜ்ஞாரூபம்; உபதேசரூபம்; ஆகவே சாஸ்த்ரமுகேந ஸாமாந்யத: ப்ரயோஜயிதா ஈசன் என்றதாகிறது. காரயித்ருத்வமும் ப்ரயோஜயித்ருத்வமும் வேறுபட்டதன்று. ப்ரயோஜயித்ருத்வத்திற்கு ப்ரமாணமாக 'ஸாதுகர்ம காரயதி அஸாதுகர்ம காரயதி' என்கிற ஸ்ருதியை உதாஹரிக்கிறார் ஸ்ருதப்ரகாசிகாசார்யர். ஆகவே ஸாமாந்யத: காரயித்ருத்வம் என்பது ஸம்ப்ரதிபந்நமே யாகையால் 'ஸாதாரணதயா' என்கிற பதம், ப்ரயோஜநவத்தாகிற தென்பது ஸுஸ்பஷ்டமே. 'ஹாவ' சப்தத்தை ப்ரயோகித்திருப்பதாலும் இது உண்மை காரயித்ருத்வமன்று என்று ஏற்படுகிறதாம். 'அயம்' என்றால் வாச்யார்த்தமேயாய்த் தாத்பர்யார்த்தம் வேறாகுமோ என்று சங்கிப்பதற்கு இடமுண்டு. 'ஹாவ' என்றதனால் ஐயமறத் தாத்பர்யார்த்த மிதுவே என்றல்லவோ விளங்கும்? 'ஸாதாரணகாரணத்வேந ப்ரயோக:' என்று ரத்நபேடிகா வ்யாக்யாநத்தில் காரயித்ருத்வ சப்தமில்லையே என்கிறார். ஸாதாரண காரணத்வமானது காரயித்ருத்வமன்று என்றும் காணவில்லையே? இன்னும் 'ஸர்வஸ்வாரம்பகாரயித்ருத்வஸ்ய' என்பதாக அடுத்தாற்போலவும் ப்ரதம வ்யாக்யாநத்தில் காண்கிறதன்றோ? "ஈசனிடத்தி லிருப்பதாக நீ நினைக்கும் காரயித்ருத்வம்" என்பது இதன் பொருளாகுமோ? உண்மை காரயித்ருத்வ மென்றல்லவோ ஸ்வரஸமாகத் தேறும்?

"ப்ரஸ்தாவத்திலுள்ள காரணத்வத்தை காரயித்ருத்வமென்று உபசாரமாகவும் சொல்லியிருக்கலாம் என்றதுவும் ஸரியன்று; முக்யார்த்தத்தில் ஏதேனும் அநுபவத்தில் இருந்தாலன்றி உபசாரம் ஸித்திக்கமாட்டாதே. இன்னும் ஏதேனு மருக்கலாம்" என்பதாக மற்றொரு நிர்வாஹம். அதாவது: முக்யமான காரயித்ருத்வமாகில் இதை யாம் இசைவதற்கென்? "காரயித்ருத்வாதிவத் ஸாதாரணகாரணத்வேந" என்கிற உபஸம்ஹார ஸ்ரீஸூக்தியும் ஸ்வரஸமாகப் பூர்வ ப்ரதிபந்நமான ஸாமாந்ய காரயித்ருத்வத்தையே காட்டுகிறது. உபநிஷத் பாஷ்யகாரர் திருத்திக்கொண்டிருப்பதாக இவர் எழுதியதையே திருத்திக்கொள்ள வேண்டும். "ஈசாத்வேபி தேஹேஷு ஸ்வாதிஷ்டோஹ்யஸூயக:" என்கிற கீதாவசநத்திற்கு "ஸர்வஸ்ய காரயிதாரம் வாஸுதேவம் தம்" என்கிற பாஷ்யத்தாலும் ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் காரயித்ருத்வம் ஸ்வரஸமாக ஸித்திக்கின்றது.

இதெல்லாமிருக்க: இந்த ஸ்வாமி தாமே பதினேராவது ஸஞ்சிகையில் ஈஶ்வரனுக்கு ஜீவக்ரியையில் கர்த்ருத்வமே கிடையாதா! இத்யாதியாக ஆக்ஷேபம் செய்துகொண்டு, ஈஶ்வரனுக்கு ப்ரயோஜக கர்த்ருத்வம் உள்ளதுதான்; 'க்ஷ: ப்ரவிஷ்ட:' இத்யாதி ப்ரமாண ப்ரதிபந்நமான ஸர்வ நியந்த்ருத்வ ரூபமிது; இறைவனுக்கு நித்யஸித்தம் என்று ஸ்தாபநம் செய்திருக்கிறர். நியந்த்ருத்வமே காரயித்ருத்வமும் என்பதை ஆசார்யன் பரமத பங்கத்திலே கண்டரவேண அருளிச் செய்திருக்கிறர். நயமயூக மாலிகையில் "ஈசன் காரயிதாவாகில் ஜீவனுக்கு ஸ்வாதந்தர்யம் போய்விடுமே என்று சங்கித்து, ப்ரயோஜகனை அரசனல் நியமிக்கப்பெற்ற ப்ரயோஜ்ய கர்த்தாக்களாகிய மந்த்ரி முதலியவர்கள் ஸ்வாந்தத்ரியம் பெற்றிருக்கக் காண்கிறேம்" என்று தீக்ஷிதர் காரயித்ருத்வத்தை ப்ரயோஜக கர்த்ருத்வ ரூபமாகக் காட்டியிருக்கிறர். ஆகவே ஸர்வ நியந்த்ருத்வ ரூபம் ப்ரயோஜக கர்த்ருத்வம் என்றும், அது நித்யஸித்தம் என்றும் இசையும் இந்த ஸ்வாமி காரயித்ருத்வத்தைப் பிந்நமாக எண்ணி, ஜீவருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈசனுக்கு இது இல்லை என்று ஸாதிக்க முயல்வது பயனற்றதே. ஆகையால் இரண்டு விதமான காரயித்ருத்வத்தில் ஸாதாரண காரணத்வத்தை உபேக்ஷகத்வ மென்கிறது, விசேஷத: காரயித்ருத்வமானது உபேக்ஷகத்வ நிலையில் கிடையாது என்பதாக ஸித்திக்கின்றமையால், உபேக்ஷகத்வமானது காரயித்ருத்வ ரூபம் என்று மூன்ருவது ப்ரதிஜ்ஞையையும் இவர் தூஷிப்பதற்கில்லை. இப்படி ப்ரமேயாம்சங்கள் மூன்றிலும் இவர் தூஷணத்திற்கு அவகாச லேசமுமில்லை.

[தொடரும்]

ஸ்ரீ:

மதிப்புரை

புகழ்மாலை - ஆருவது. 'ஸ்ரீ அஹோபில மடம் திவ்ய ஆஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகிய சிங்கர்களின் புகழ்மாலை' என்னும் பெயருடன் ஒரு க்ரந்தம் ஆறு வர்ஷகாலமாக ப்ரதி வர்ஷம் 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தன்று ப்ரசுரம் செய்யப்பட்டு வருகின்றது என்பது ப்ராயேண ஸ்ரீ ஸந்நிதி ஶிஷ்யர்களெல்லாருக்கும் தெரிந்திருக்கலாம், இதை ப்ரசுரம் செய்யும் ஸ்வாமி, காருகுரிச்சி ஸ்ரீ. உ.ப. ஸுந்தரராஜாசார்யர் என்னும் திருநாமமுடைய ஒரு ஆஸ்திகாக்ரேஸரர்; ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தில் அளவற்ற ஊக்கமுள்ளவர்; ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகிய சிங்கர்களின் வைபவத்தையும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தமான வேறு பெருமையையும் எல்லாருக்கும் நன்கு தெரியப்படுத்துமாறு வெளியிடவேண்டும் என்பதே இவருடைய முக்ய நோக்கம். இந்த ஆருவது புகழ்மாலையில், 39-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் பட்டாபிஷேக ஸ்ரீ முகமும், 38-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பகவத்பக்தி மஹிமையும், 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் பத்தொன்பதாவது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவத்தின் அறிக்கையும், 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் ஶிஷ்யர்களின் ஐஹிக ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்துச் செய்யப்பட்டு வரும் வார்ஷிக வித்வத் ஸபை, ஶாஸ்த்ர வேத பாடஶாலைகள், மாஸம்தோறும் வெளிவரும் பத்ரிகைகள், இவை முதலிய மஹோபகாரங்களின் வைபவமும் விஸ்தாரமாக எழுதப்பட்டுள்ளன. நிற்க: ஸ்ரீ ஸந்நிதியைப்பற்றிய அநேக ஶிலா ஶாஸநங்களும் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. அநேக சித்திரப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் மூல்யம் அணு 10. அபேக்ஷிப்பவர்கள், "வங்கிபுரம் கே. டி. ஸ்ரீ ஸுந்தரராஜாசார்யர், பி.ஏ., எல்.டி. காருகுரிச்சி B O., Via Shermadevi, S.I.Ry., Tinnevelly Dist., என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருநரசிங்கப்பெருமான்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை அய்யங்கார்,
தமிழ் வித்வான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

“எங்குமுளன் கண்ண னென்ற மகனைக்காய்ந்து
இங்கில்லை யாலென் றிரணியன் தூண்புடைப்ப
அங்கப் பொழுதே அவன்வீயத் தோன்றியவென்
சிங்கப் பிரான்பெருமை ஆராயும் சீர்மைத்தே!” [திருவாய்மொழி 2-8-9]

என்பர் வண்டலம்புஞ் சோலை வழுதி வளநாடனை மாறன் சடகோபன். கன்னி நன்மாட மங்கையர் தலைவன் காமருசீர்க் கலிகன்றியாகிய திருமங்கையாழ்வார்,

“பள்ளியி லோதி வந்ததன் சிறுவன் வாயிலோ ராயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போதவாங் கதனுக் கொன்றுமோர் பொறுப்பில னாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப் பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத் திருவல்லிக் கேணிக்கண் டேனே.”
[பெரியதிருமொழி 2-3-8]

என்று தாம் கண்டநுபவித்தவாறே பேசுவர்.

“வரிசிலை வாள்முகத் தென்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னைமுன் னேநிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேலென் கைவைத்துப்
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்”
(தையொரு திங்கட்பாமாலை 6-9)

என்று ஆயனுக்காகத் தான் கண்ட கனவினைத் தலைவி தோழிக்குக் கூறுமுகத்தான், வேயர்புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதையான ஸ்ரீ ஆண்டாள் சோபனத்துடன் சொல்லுகின்றாள்.

வில்லிபுத்தூர் விட்டுசித்தனாகிய பெரியாழ்வார், அந்தியம் போதில் அரியுருவாகி அரியை அழித்தவனுக்குத் திருப்பல்லாண்டு கூறுகின்றார்.

“சிங்கமாய தேவதேவ! தேனுலாவு மென்மலர்
மங்கைமன்னி வாழுமார்ப! ஆழிமேனி மாயனே.” (திருச்சந்தவிருத்தம் 24)

என்கின்றார் திருமழிசைவந்த சோதி.

மாலுகந்த வாசிரியர் திருநரசிங்கப் பெருமானை வழிபட்ட தொன்னெறியாம் நன்னெறியின் சீர்மையினை எடுத்தியம்ப எவரால் முடியும்? இஃது இவ்வாறிருக்க: நந்தமிழகத்தே ஆன்றோர் சிங்கப்பிரானைப் போற்றியுள்ளபடியை நற்றமிழர் நன்னூற்களிற் கொண்டாடியிருக்கும் பண்பினைச் சற்றுப் பகர்வாம். எட்டுத்தொகையுள் ஐந்தாவதாகிய ‘பரிபாடல்’ மிகவும் புராதன மென்பது பேரறிஞர் துணிபு. அங்குள்ள ஆளரியின் பெருமையினை எடுத்தியம்புவாம் இங்கு.

“செயிர்தீர் செங்கட் செல்வ நிற்புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பியநடுக்கத்
தலர்ந்த புகழோன் றாதை யாகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக நீயிகழா
நன்று நட்டவவனன் மார்பு முயங்கி
ஒன்று நட்டவனுறு வரை மார்பிற்
படிமதம் சாம்ப வொதுங்கி
இன்ன வின்னரொ டடிமுர சியம்ப

20. வெடிபடா வொடிதூட் டடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த வுகிரினை."
[நான்காம்பாடல், கடவுள்வாழ்த்து: கடுவனிளவெயினனார்]

இதன் பொழிப்பு வருமாறு:—

கோபத்தாலன்றி இயல்பாகவே சிவந்த கண்களை யுடையோய்! பிருங்கலாதன் (பிரகலாதன்) நின்னைப் புகழ, இரணியன் சினத் தீயாற் புகைந்த நெஞ்சொடும் புலர்ந்த சாந்தொடும் அவன் பலபல பிணிகள் படப் பிணித்தவழி, அம்மிக்க நோயால் ஒடுங்குதற்குக் காரணமான அப் பிருங்கலாதன் தன் தாதையாகலின் அவ்விகழப்படுவோனை இகழாத நெஞ்சினனாக, நீ அவனை இகழ்ந்து தனக்கு நன்றாக நட்ட அப்பிருங்கலாதன் வருந்தாமல் அவன் நெஞ்சிற் பொருந்தி நின்னோடு ஒன்றாக வரங்கொண்ட இரணியனது உறுவரைபோலும் மார்பிற் பகைவலி கெடச் சென்று துன்பத்தைக் காட்டும் உற்பாதங்களோடு பொருந்தி அவன் இடிமுரசு ஒலிப்ப நீ புறப்படுதலால் வெடித்து ஒடிந்த தூணின் பிளப்போடொத்த நின்னால் தடியப்பட்ட ஊன்படி பலபட வகிர்தல் வாய்த்த நகத்தையுடையை.

"மடநெஞ்ச மென்றும் தமதென்றும் ஓர்கரு மங்கருதி
விடநெஞ்சை யுற்றார் விடவோ வமையுமப் பொன்பெயரோன்
தடநெஞ்சம் கீண்ட பிரானார் தமதடிக் கீழ்விடப் போய்த்
திடநெஞ்ச மா யெம்மை நீத்தின்று காறும் திரிகின்றதே" (திருவிருத்தம் 46)

என்ற நல்லார் நவில் குருகூர் நகரான் திருமால் திருப்பேர் வல்லாரடிக் கண்ணி சூடிய மாறன் விண்ணப்பம் செய்த சொல்லார் தொடையலின் மெய்ப்பாட்டை இன்றுகாறும் சிங்கவேள்குன்றமாகிய வேத வெற்பினுறையும் "மாலோலன்" நம் அழகியசிங்கருடனே சஞ்சரித்து உலகை உய்யக்கொண்டு வருவதிற் காண்கலாம். அதிலும் தற்போது இந்தத் திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்திர மஹாதேசிகனாகிய ஸ்ரீ அழகிய சிங்கர் இதுகாறும் இயற்றியுள்ள இசை மிகுந்த புகழ் மலிந்த கைங்கரியங்கள் மிகவுஞ் சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன. கருணாகரக் கடவுள் களித்து விளையாடும் மதுராந்தகத் திருப்பதியில் நிறுவப்பெற்றுள்ள ஸம்ஸ்கிருத கலாசாலையும், ஸ்ரீ ஸந்நிதி பத்திரிகையாக நடத்தப் பெற்றுவரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்பிரியாவும், 'திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார்' என்ற நம் மறைமுடித் தேசிகனார் திருவாக்கின்படி ஒலி ஒளியாய் அமைந்து நடமாடும் வேத பாடசாலையும், பிரதி ஆண்டும் நடைபெற்றுவரும் வித்வத் ஸதஸ்ஸுகளும், வைதிக யுவர்களை ஊக்கி வரும் பரீக்ஷைப் பரிசில்களும், அவ்வக்காலங்களில் சிறப்புற்றோங்கும் ஆராதனைகளும், வித்வான்களைத் தக்கபடி போற்றும் பான்மைகளும், ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேப விலக்ஷணமும், 'ஸ்ரீ அழகியசிங்கரே எண்குணத்தான்' எனவே அனைவரும் எண்ணிப் புகழ்ந்தேத்துமாறு செய்ய வல்லன. இது ஆறேழ் பட்டத்தின் தனிச் சிறப்புப்போலும்! 'குரு பாதமே துணை' என்றிருக்கக்கடவ நற்சீடனுக்கு இவ்வாறு போற்றியுரைப்பதையே நற்கருமமாக விதித்த நம் தூப்புல் வள்ளலாரின் தூமொழியே நமக்குத் தஞ்சம். இவ்வழகியசிங்கர் அரோக திட காத்திரராய்ப் பல்லாண்டுகள் இவ்வய்யகத்திருந்து எம்மனோரை அநுக்ரஹிப்பாராக. வாழ்க திருநரசிங்கர்! வாழ்க அழகுசிங்கர்!! வாழ்க அவனடியார்!!!

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

ஸ்ரீ அழகியசிங்கரின் மங்களாசாஸந க்ரமம்

ஸ்ரீ அழகியசிங்கர் திருவெவ்வுளூரிலிருந்து மார்கழி மீ 13வ திங்கட்கிழமை எழுந்தருளினார்; திருப்பதி திருமலை பரமஹம்ஸ பெரிய ஜீயர் ஸ்வாமி நியமநத்தை ஶிரஸா வஹித்துத் திருநின்றவூர் தேவஸ்தாநம் ஏஜண்டு ஸ்வாமி ஷை யூர் பக்தவத்ஸலப் பெருமாள் ஸந்நிதியில் நமது ஸ்ரீ அழகிய சிங்கருக்கு மார்கழிமீ 14வ செவ்வாய்க்கிழமை முதல் மூன்று திநங்கள் மங்களாசாஸநத்தை அழகாக நடத்திவைத்தார். திருவடிகோவில்வரை ஸ்ரீ சடாரியை எழுந்தருளப்பண்ணி, இரட்டைத் திருமாலை திருப்பரியட்டத்துடன் அருளிப்பாடிட்டு, ஸ்ரீ சடாரியையும் ஸாதித்தார்கள். பிறகு பக்தவத்ஸலன் ஸந்நிதிக்குள் சென்று “ நீண்டவத்தைக் கருமுகிலை யம்மான் றன்னை, நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலை” என்று தலஶயநத்து எம்பெருமானை மங்களாசாஸநம் செய்யும்போதும், திருக்கண்ணமங்கை எம்பெருமானை மங்களாசாஸநம் செய்யும்போது “கருமாமணிக் குன்றினை நின்றவூர் நித்திலத் தொத்தினை” என்றும் திருமங்கைமன்னன் ஈடுபட்ட நிலையை அநுஸந்தித்து ஸ்வாபதேஶம் ஸேவித்து மங்களாசாஸநம் செய்தானபிறகு, அருளிப்பாடிட்டுத் தீர்த்தம் முதலிய வரிசைகளை ஸ்வீகரித்தருளினர். அன்று லாலாபேட்டை தேசிகாசாரியரால் ஆராதிக்கப்பட்டு, மறுதினம் காஞ்சிபுரம் தேசிகாசார்ய ஸ்வாமியாலும் பாலவேடு நரஸிம்மாசார்ய ஸ்வாமியாராலும் ஆராதிக்கப்பட்ட பிறகு, திருக்கள்ளம் காவனூர் முதலிய அக்ரஹாரங்களுக்கு எழுந்தருளினர். காவனூருக்கு எழுந்தருளும்போது, 34-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் அவதாரஸ்தலமான ஸ்ரீ அத்திப்பட்டுக்கு எழுந்தருளி, “[illegible]” என்று மிப்புடைகளிலே “[illegible]” என்றபடி சுமார் 78 வயதுள்ள சுப்பராயப் பிள்ளை என்பவனால் 34-வது ப்பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்த மனை முதலியவை காட்டப்பட்டு, ஆஶ்ரம ஸ்வீகாரார்த்தம் ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளியது முதலியன சொல்லக் கேட்டு ஸந்தோஷித்து, அங்கு மனையில் இருந்த தூண்கள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிஸம்பந்தம் பெற்றிருக்கும் என்று, “மண்ணை யிருந்து துழாவி வாமனன்மண் ணிதென்னும்” என்பதுபோல் நினைத்துச் சிரஸா வஹித்தருளினர். பிறகு திரும்பி மறுதினம் திருக்கள்ளம் எழுந்தருளி, 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரத்திற்காக வேத பாராயண இதிஹாஸ புராண க்ரந்தாதி பாராயணங்களை ஆரம்பித்து நடத்தி, 27வ திருநக்ஷத்ரத்தை வெகு விமர்சையோடு நடத்தி, வீதிப் புறப்பாடு முதலியனவும் ஸ்ரீசிங்கப்பிரான் மங்களா சாஸநம் சாத்துமுறைகளும் நடத்தி, விஶேஷ ததீயாராதநம் செய்துவைத்து, பாராயண ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனைகளையும் மார்க்க வ்யயமும் ஸாதித்து அருளினர். பிறகு, கரளப்பாக்கம் பாக்கம் முதலிய அக்ரஹாரத்துக்கு ஏள்ளி, ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதிக்கு மறுபடி ஸங்க்ராந்தியன்று மங்களாசாஸநம் செய்ய எழுந்தருளினர். திருவெவ்வுளூருக்குக் கிழக்கில் காகளூர் ஏரியினருகில் இருக்கும் மண்டபத்திற்கு ஸ்ரீ ஶடாரியை எழுந்தருளப்பண்ணி அளிருபபாடிட்டுத் திருப்பரியட்டம் முதலிய வரிசைகளை ஸமர்ப்பித்தார்கள். பிறகு சுமார் 1200 ரூ. விலையுள்ள அழகிய மாங்காய்மாலை (கல்லிழைத்தது) ஒன்றைக் காணிக்கையாக ஸ்ரீ எவ்வுள் கிடந்தானுக்கு ஸமர்ப்பித்து [illegible] ஸேவித்தருளினர்.

வித்வான் அம். வ நரஸிம்மாசாரியர் : ஸ்ரீகார்யம்.

---

(2)

ஸ்ரீ அழகியசிங்கரின் எவ்வுட்கிடந்தான் மங்களாசாஸந வைபவம்

ஶ்ரீ ஹ்ருத்தாபநாஶிதடஸ்தம் ஶ்ரிதஶேஷதல்பம்
ஸ்வஜ்ஞயோர்ஹ்ருத்வஸநாவநயோர்மத்யஸம்ஸ்தம் |
ஶ்ரீ ஶாலிஹோத்ரஶிரஸாய ப்ரதத்தஸ்வதேஹம்
ஶ்ரீ வீரராகவவிபும் ஶ்ரயதாம் மநோ மே ||

ஸ்ரீ அஹோபிலமட திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியுள்ள ஶ்ரீமத்வேதமார்கப்ரதிஷ்டாபநாசார்யாதி பிருதாலங்க்ருதரான 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர், சுமார் 25 நாளைக்கு முன் பூதபுரியில் எம்பெருமானுரை மங்களாசாஸநம் செய்துவிட்டுத் திருவெவ்வுள் கிடந்தானின் மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளும் ஸமயம், திரு அத்யயந உத்ஸவமாகிற 20 நாளில் ஷை திவ்யதேச வாஸிகளால் ஸந்நித்யயோஜந கைங்கர்யமான வேதபாராயண அத்யாபக ஸ்வாமிகளுடைய கோஷ்டியில் எழுந்தருளி, ஷை உத்ஸவ திநங்களில் ஸ்ரீ வீரராகவன் பிரதிதிநமும் ஸேவைஸாதிக்கும் அதிமநோஹரமான அலங்காரத்தை ஆழ்ந்து அநுபவித்து அதி பரவசராய், ஷை எம்பெருமானுக்குப் பீதாம்பரங்களையும் சால்வை முதலானவைகளையும் ஸமர்ப்பித்து, ஷை உத்ஸவ சாத்துமறை திநத்தில் ஆழ்வார் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினபோது பல்லாயிரம் ஸ்வாமிகளிடையே ஸ்ரீ அழகியசிங்கர் பெருமாளைப் பிரார்த்தித்த அழகு, நாஸ்திக வாதம் செய்பவரும் நெஞ்சுருகிக் கைகுவித்து நின்றதைக் கண்ணாரக் கண்டு ஸேவித்தவர்க்கே பெரும்பாக்யம் என்னலாம்படி மங்களாசாஸநம் செய்து, மறுநாள் ஸ்ரீ வீரராகவனின் ஸமஸ்த மரியாதையையும் பெற்று, திருநின்றவூர் திவ்யதேச மார்க்கமாய்த் திருக்கள்ளம் முதலான ஶ்ரோத்ரியாக்ரஹாரங்களை ஸந்தர்ஶிக்கத் திருவுள்ளம் பற்றி, ஷை அக்ரஹாரத்தாரால் நன்கு ஆராதிக்கப்பட்டு, அவ்வூரிலேயே ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரான ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ரமஹா தேசிகோத்தமரின் வார்ஷிக மஹோத்ஸவத்தை அதிவிமர்சையாய் நடத்தி, அங்கு நின்றும் ஸ்ரீ ஷஷ்டபராங்குஶ மஹா தேசிகனின் திருவவதாரஸ்தலமான கரளபாக்கம் அக்ரஹாரஸமேதமாய் மறுபடியும் தைமீ 1உ (14—1—43) வியாழக்கிழமை ஸ்ரீ வீரராகவனின் மங்களாசாஸநத்துக்கு எழுந்தருளினர். அப்பொழுது ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி தேவஸ்தாந ஸமஸ்த பரிஜநங்களும் ஸர்வவித வாத்ய கோஷத்துடனும் பூர்ணகும்பத்துடனும் ஸ்ரீ சடகோபனைப் பெரியதொரு ரஜதமயமான தண்டிகையின்மேல் ஏள்ளப்பண்ணிக்கொண்டு, ஒருமைலுக் கப்பால் உள்ள, ஸ்ரீ வீரராகவன் யாத்ரோத்ஸவ காலத்தில் மண்டபப்படியாய் எழுந்தருயிருக்கும் மண்டபத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளிப்பாடிட்டு, திருப் பரியட்டம் சால்வை பல் புள்ளி துப்பட்டி சாதரா இரட்டைமாலை அபயஹஸ்தம் முதலான வரிசைகளை வழங்க, ஸ்ரீ அழகியசிங்கரும் 'தந்யோஸ்மி' என்று திருவுள்ளம்பற்றி, அங்குநின்றும் அநேக பாகவதோத்தமர்களின் ஸ்வஸ்திவாசந பாராயண கோஷத்துடன் எவ்வுட்கிடந்தான் இன்னடியை அடைந்து, சுமார் ஆயிரம் ரூபாய்க்குமேல் பெறும்படியான பெரியதொரு கல்லிழைத்த மாங்காய்மாலையை ஸமர்பித்து, வழக்கம்போல் ஸர்வ மரியாதைகளையும் பல்புள்ளி துப்பட்டி சால்வை துப்பட்டா முதலான பகுமாநங்களையும் பெற்று, ப்ராகாரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வஸுமதிதேவியான கநகவல்லித் தாயார் முதலான எல்லா ஸந்நிதிகளிலும் மங்களாசாஸநம் செய்து மடத்துக்கு ஏள்ளினதும், ஸ்ரீ ராகவனின் திருப்பண்யார ப்ரஸாதங்களை வாத்யகோஷ சத்ர சாமரத்துடன் பகுமாநமாய் ஷை தேவஸ்தாந ஏஜண்டு ஸ்வாமியின்மூலம் கொண்டு ஸமர்பித்ததையும் திருவுள்ளமுகந்து, நாலைந்து நாள் எழுந்தருளியிருந்து, இன்று மதுரமங்கலம் மார்க்கமாய்ப் பேரருளாளன் மங்களாசாஸநத்துக்காக இத்திவ்ய தேசத்தினின்றும் எழுந்தருளியாயிற்று.

'தர்ஶநாத் ஸ்பர்ஶநாத் ஸ்நாநாத் ஸர்வஹ்ருத்தாபநாஶிநீ |
ஸ்தஸ்ஸ்வேஷு லோகேஷு நாம்நா ஹ்ருத்தாபநாஶிநீ ||'

என்று இத்திவ்யதேசத்தில் மிக ப்ரஸித்தமாய் ஸகல ஜனங்களாலும் கொண்டாடப் படுகிற ஹ்ருத்தாபநாசநீ புஷ்கரிணியானது கொஞ்ச நாட்களாய் தீர்த்த மில்லாமல் வறண்டு இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய கடாக்ஷ வீக்ஷணத்தால் புஷ்கரிணியும் புஷ்கலமாய் விளங்க, ஸ்ரீ அழகியசிங்கரும் நீராட்டம் முதலான நித்யாஹ்நிகங்களை அதி குதூஹலமாய் அநுஷ்டித்துத் திருவுள்ளம் உகந்தாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கரின் இத்திவ்ய தேசப் பிரிவைத் தாங்காத ஸகல பக்தாக்ரேஸர்களும், மறுபடி ஸ்ரீ அழகியசிங்கரின் விஜயத்தை மிகவும் ஆஹ்லாதகரத்துடன் ப்ரதீக்ஷித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் ஸகல திவ்யதேச யாத்ரையையும் அதி த்வரையுள் செய்தருளி, திருமேனிப் பாங்குடன் மறுபடி எவ்வுட்கிடந்தான் இன்னடியை மங்களாசாஸநம் செய்து ஸுகோத்தரராய் எழுந்தருளி இருக்கவேண்டு மென ஸ்ரீ வீரராகவனும் ஸ்ரீவஸுமதி நாச்சியாரும் வரம் தந்தருளிக் கடாக்ஷிக்கவேண்டும்.

பழவேரி: சக்ரவர்த்தி கிருஷ்ணதாஸ:

---

(2)

திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடம்

ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திர மஹோத்ஸவக் கொண்டாட்டம்

ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தானத்தில் நாற்பதாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 2—1—43 சனிக்கிழமை யன்று, திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் வெகு விமரிசையாய் நடைபெற்றது வேதபாராயணம், பிரபந்தஸேவை, சாத்துமுறை, ஸம்பாவனை, ததியாராதனை, அநுக்ரஹம், முதலியவை சிறப்பாக நடந்தன. அன்று மாலை ஸ்ரீ. உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் அக்ராஸனத்தில் ஸ்ரீ. கே. டி. ஸுந்தரராஜாசாரியாரால் இயற்றப்பெற்ற "அழகியசிங்கர் புகழ்மாலை (6)" அரங்கேற்று விழா நன்கு நடந்து நிறைவெய்தியது. அம்மடத்து ஏஜண்டும், நல்லறிஞரும், ஈதலிற் சிறந்தவரும், குருபக்தி மிக்கவரும், கைங்கர்யமே புருஷார்த்த மென்ற நடையில் நின் றுயர்பவரும் ஆகிய ஸ்ரீ. பி. கிருஷ்ணசாமி அய்யங்கார், புகழ்மாலை ஆசிரியருக்கு உயர்ந்த வேஷ்டி உத்தரியம் நல்கினர். மறுநாள் (3—1—43) ஞாயிறன்று மாலையில் ஷை ஸுந்தரராஜாசாரியார் "ஆசார்யமஹிமை" எனும் விஷயம் பற்றி உபந்யஸித்தார். தென்பாண்டி நன்னாட்டில் தென்னாட்டுத் திலகமாய்த் திகழ்ந்தவரும், சிறந்த வள்ளலாரும், ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்துக்கு ரத்நதீபமாக வொளி மிக்குயர்ந்தவரும், உலகத்துக்குத் திலதமாய் நின்ற திருவேங்கடத் தெம்பெருமானது திருவருட்பேறு பெற்றதனை உலகறியக் காட்டுவதற்காகத் தமது இரு கண்மணிகளான இருந்தவப் புதல்வர்கட்கு ஸ்ரீநிவாஸன் வேங்கடேசன் என்று அவனது திருநாமத்தையே இட்டு வழங்கிய நன்றிபோற்றும் நலனுடையவரும், திருமாலிருஞ்சோலைக் கள்ளழகர் திருவடியில் அணிவரும் அதிசயிக்குமாறு திருத்தொண்டாற்றி நாட்டிய பெரும்புகழைப் பெற்றவருமாகிய ஸ்ரீ சேஷாத்ரி ஐயங்கார் அவர்களின் கனிஷ்ட புதல்வரும், 'தந்தையினும் பதின்மடங்கு தனயன்' என்ற ஆன்றோர் வசனத்தை நீருபிக்கவே பிறந்த அண்ணலும், நற்குணக் கடலென்றே கூறலாம்படி அமைந்துள்ளவரும், அண்டினவரைப் பல் படியாகப் போற்றும் அருள் உடையவரும், அன்பிற்றலைசிறந்தவரும், வள்ளலாரும், ஆகிய அட்வொகேட் ஸ்ரீ எஸ். வேங்கடேச அய்யங்காரவர்கள் அன்புடன் அளித்த சால்வையை ஏஜண்டு ஸ்வாமி ஷை ஸுந்தரராஜாசாரியருக்குப் போர்க்க, பந்தல்குடி திருமலை அய்யங்கார், அய்யங்காரவர்களின் குணாதிசயங்களை விரிவாக எடுத்தியம்ப, மஹோத்ஸவம் அன்று பூர்த்தியாயிற்று.

"பாரத்வாஜி"

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

சென்ற வருஷம் தை மாஸத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்து யாத்ரையாகப் புறப்பட்ட ஸ்ரீ அழகிய சிங்கர், மத்ய ப்ரதேஶத்திலுள்ள அநேக திவ்ய தேஶங்களில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மங்களா ஶாஸநம் செய்துகொண்டு, நாளது தை மாஸம் 11வ ப்ராத: காலத்தில் ஸ்ரீவரத ராஜனுல் அதிஷ்டிதமான காஞ்சீ என்று ப்ரஸித்தி பெற்றிருக்கும் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளினர். ஸ்ரீ அழகிய சிங்கருடைய வரவைச் சிர காலமாக எதிர்பார்த்திருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பக்தர்களெல்லாரும் பரிபூர்ண மநோரதர்களாய்த் தாம் அநுபவிக்கும் ஆநந்தத்தின் ப்ரீவாஹமாக அங்யாத்ருஶமான ஒரு மஹோத்ஸவத்தை அன்று கொண்டாடினர்கள். ஸ்ரீ அழகிய சிங்கர், ஶிஷ்யர்களாலும் அங்குள்ள மற்றை ஆஸ்திகர்களாலும் யதார்ஹம் புரஸ்கரிக்கப்பெற்று, ஸ்ரீவரதராஜன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, பிராட்டி ஸஹிதனுகத் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு மங்களங்களை ஆஶாஸிக்க, பூர்வம் ஸ்ரீ தேஶிகன் மங்களாஶாஸநம் செய்யும் காலத்தில் அநுபவிக்கப்பட்ட ஶோபையை ஸ்ரீ காஞ்சீநகரம் மறுபடியும் அநுபவித்தது.

ஸ்ரீ தேப்பெருமாள் மங்களாஶாஸநம்.

பதின்மூன்று வர்ஷகாலமாக ஸ்ரீ வரதராஜனுடைய ஸேவையை இழந்து, "**धन्याः पश्यन्ति मे नाथम्**" [என்னுடைய தநத்தை நான் அநுபவிக்கப் பெறவில்லையே! யார் யாரோ அதை அநுபவிக்கிறார்களே! அவர்களுடைய பாக்யமே பாக்யம்.] என்னும் ரீதியில் விடாய்த்திருந்த ஸ்ரீ அழகிய சிங்கர், பீதாம்பரதரனையும், ஶரத்காலத்துப் புண்டரீகம் போன்ற திருக் கண்களை உடையவனையும், பால த்விரத விக்ரமனையும், த்வஜ வஜ்ராங்குஶாதிகளால் சிஹ்நிதங்களான திருவடிகளை உடையவனையும், ஸாநுக்ரோஶமான புன்முறுவலுடன்கூடிய கடாக்ஷத்தை உடையவனையும், புண்ய கந்தாநுலிப்தமான திருமேனியை உடையவனையும், பக்தர்களின் அநுக்ரஹத்தை உத்தேஶித்தே இவ்விடத்தில் அர்ச்சாரூபியாக அவதீர்ணனையும் ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ வரதராஜப்பெருமாளைக் கண்ணார ஸேவித்து, அவனுடைய தர்ஶநாஹ்லாதத்தால் பாஷ்ப பர்யாகுலங்களான கண்களுடன் யதோக்தமான மங்களத்தை ஹார்த்தமாக ஆஶாஸித்தார். அழ

கிய சிங்கர் அப்போது புளகாசிதாங்கராய் ஔத்கண்ட்யத்தாலே வாயெழாமல் நிற்க, ஸ்ரீவரதராஜனே அதை அறிந்து, தன்னுடைய ரதாங்காங்கித பாணியால் அவரைத் தனது அபிமுகமாக ஆகர்ஷித்து ஆலிங்கநம் செய்து கொண்டாரோ என்று நினைக்கும்படியாக இருந்தது. அவருடைய அந்தராத்மாவும் நிதராம் தெளிந்தது போல் அவருடைய திருமுகமண்டலத்திலிருந்து தெரிந்தது.

"संश्लेषादपि विश्लेषो विष्णोर्भक्तिमतां वरः ।
तत्सातत्यार्थमूलत्वात्"

[விஷ்ணுவினிடத்தில் உண்மையான பக்தியைச் செய்யும் பக்தர்களுக்குச் சேர்த்தியைக்காட்டிலும் பிரிவே ஶ்ரேஷ்டம். பிரிவு காலத்தில் அந்தப் பக்தி எவ்வித விச்சேதமுமின்றிக்கே தொடர்ந்து நிற்குமன்றோ?] என்கிறபடி விஶ்லேஷ காலத்தில் பக்தர்களுக்கு எவ்வித குறைவுமில்லை என்பது உண்மையே. ஆனாலும், பகவானுக்கு பக்தர்களுடைய விரஹம் அதிதுஸ்ஸஹமன்றோ? அவனை ப்ரஹர்ஷிப்பிக்க வேண்டுவதே இவர்களுடைய நோக்கமாதலால் இவர்கள் ஸம்ஶ்லேஷத்திற்கு விடாய்ப்பது.

ஸ்ரீ அழகியசிங்கர் செய்துவந்த மநோரதங்களுள் ஒன்றாகிய "**मालोलसभा**" என்னும் வார்ஷிக வித்வத் ஸதஸ், சென்ற வர்ஷத்தில் ஐந்து திநங்கள் நடைபெற்றது; இப்பொழுது சென்ற திங்கட்கிழமை முதல் பத்து தினங்கள் நடைபெறுகின்றது. அநேக வித்வான்கள் அதில் அந்வயித்திருக்கிறார்கள். இது முடிந்தவுடன், 21உ புதன்கிழமை திநம் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் கொண்டாடப்படும்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி, வேதாந்த விசாரம், பகவத் ஸேவை, இத்யாதியான பெருமையால் இந்த ஸ்தலம் இப்பொழுது அடைந்துள்ள ஶோபையை என் சொல்வோம்?

**सुभगेयं पुरी काञ्ची रम्याऽपराजितोपमा ।
यदध्यास्ते महातेजा रङ्गराजो मुनीश्वरः ॥**

* * * *

சென்ற ஸஞ்சிகையில், "**सर्वे च्यवनधर्माणः**" என்னும் ஸ்ரீ ஸூக்திக்கு ஸ்ரீ தேஶிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் அருளிச் செய்திருக்கும் வ்யாக்யாநத்திற்கும், சரம ஶ்லோகாதிகாரத்தில் ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் செய்யப்பெற்றிருக்கும் வ்யாக்யாநத்திற்கும், விஶேஷம் இருக்கின்றதென்று அடியேன் எழுதி இருந்தேன்.

'ச்யவந' ஶப்தார்த்த விசாரம்

ஸ்ரீ தேஶிகன் 'ச்யவந' ஶப்தத்தைப் பூர்வ பத ப்ரம்ஶ மாத்ரபரமாக எடுத்துக்கொண்டு, உத்தரோத்தராதிஶயித பத ப்ராப்தியையும் அது குறிக்குமென்று வ்யாக்யாநித்திருக்கையில், ஸ்ரீ ஸாராஸ்வாதிநீகாரர் "**च्युतो नष्ट इति यावत्**" என்று ஸாமாந்யமாக நாஶபரமாய் அர்த்தம் செய்தருளியிருக்கிறாராகை

யால், உத்தரோத்தராதிஶயித பத ப்ராப்தியை அவர் திருவுள்ளம் பற்றவில்லைபோலத் தோன்றுகிறதே யென்று அடியேன் ஶங்கித்தேன். இதைக் கடாக்ஷித்த மதுராந்தகம் ஸ்ரீ உப. வித்வான் வீரராகவாசார்ய ஸ்வாமி ஒரு ஸமாதானத்தை அநுக்ரஹித்திருக்கிறார். அதை ஸமக்ரமாக ப்ரசுரம் செய்வதற்கு அவகாஶமில்லையாதலால், அதன் முக்யமான அம்ஶத்தை ஸங்க்ரஹமாக இவ்விடத்தில் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். அதை அந்த ஸ்வாமி க்ருபையுடன் க்ஷமித்தருள வேணும்.

அந்த ஸ்வாமியின் ஸமாதானமாவது:— "ஸாராஸ்வாதிநீகாரர் ப்ரயோகம் செய்திருக்கும் 'நாஶம்' என்னும் ஶப்தமும் பூர்வபத ப்ரம்ஶத்தையே [முன்நிலை மற்றொரு நிலையை அடைதலையே] குறிக்கின்றது. ஆகையால் இரண்டு வ்யாக்யானங்களுக்கும் விரோதமில்லை" என்பதுதான். 'ஸத்தாக இருக்கும் ஒரு வஸ்துவுக்கு அஸத்பாவம் வருவதே நாஶம்' என்று சொல்லப்படுமாகையால், அது ப்ரக்ருத ஸ்தலத்தில் மறுபடியும் ஸம்ஸார ப்ராப்தியையே குறிக்கும் என்பது அடியேனுடைய க்ரஹணம். இம்மாதிரி க்ரஹிப்பதற்கு ஆதாரமில்லை என்று அந்த ஸ்வாமி ஸாதிக்கிறார். மேலே உதாஹரிக்கப்படும் கீதா பாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை வாக்யங்களே அடியேனுக்கு ஆதாரங்கள். "**स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात् प्रणश्यति**" என்பதை வ்யாக்யானம் செய்தருளுகையில் "**आत्मज्ञाने यो व्यवसायः कृतस्तस्य नाशः स्यात्। बुद्धिनाशात् पुनरपि संसारे निमग्नो विनष्टो भवति**" என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்தி. இவ்விடத்தில் '**प्रणश्यति**' [நாஶம் அடைகிறான் என்பதற்கு, 'மறுபடியும் ஸம்ஸாரத்தில் நிமக்நனாகிறான்' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. தாத்பர்ய சந்த்ரிகையிலும், "**प्रणश्यतीत्यत्र नित्यस्यात्मनो नाशोऽसत्समत्वम्; तच्च यथावस्थिताकारानुपलंभः**' என்னும் திவ்ய ஸூக்தி காணப்படுகின்றது. இந்த வாக்யங்களால், 'நாஶ' ஶப்தத்தால் ஸம்ஸார ப்ராப்தியே குறிக்கப்படுகின்றது என்பது விளங்குகின்றதன்றோ? "ஆத்மா நஶித்தான் என்றால், ஶரீர ஸம்யோக நாசம் பெற்றான் என்றுதானே பொருள்?" என்று இந்த ஸ்வாமி கேட்கிறார். இந்தக் கேள்வி கீழே உதாஹரிக்கப்பட்டுள்ள திவ்ய ஸூக்திகளுக்கு எப்படி ஸங்கதமாகும்? "'**तदधिगम**' அதிகரணத்தில் 'பக்தி யோகத்தில் இழியும்போது பூர்வ பாபங்கள் நஶிக்கின்றனவாக நிர்ணயம் செய்யப் பெற்றிருக்கின்றதே! நாஶம் என்பது அதோகதியேயானால், பக்தருக்கும் ப்ரபந்நருக்கும் இதை இசைக்க முடியுமா?" என்றும் இவர் கேட்கிறார். நாஶம் பாபங்களுக் கன்றோ சொல்லப்பட்டிருக்கிறது? பக்தருக்கும் ப்ரபந்நருக்கும் அது எப்படி ப்ரஸங்கிக்கும்? பாபங்களுடைய நாஶம் அஸத்பாவ ப்ராப்தி ரூபமான அதோகதியன்றோ? இந்த விஷயங்களை ஸ்ரீ ஸ்வாமி சற்றுக் கவனிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

"शान्तसङ्कल्पस्सुमना यथा स्याद्वीतमन्युर्गौतमो माऽभिमृत्यो ।
त्वत्प्रसृष्टं माऽभिवदेत्प्रतीत एतत्त्रयाणां प्रथमं वरं वृणे ॥" १०

"यथा पुरस्ताद्भविता प्रतीत औद्दालकिरारुणिर्मत्प्रसृष्टः ।
सुखँ रात्रीश्शयिता वीतमन्युस्त्वां ददृशिवान् मृत्युमुखात्प्रमुक्तम् ॥" ११

10. இவ்வாறு தர்மராஜனால் ப்ரார்த்திக்கப்பட்டவனாய், நசிகேதஸ் தனக்கு இஷ்டமான வரத்தைக் கேட்கிறான்.

[ப-ரை.] **मृत्यो** - ஹே தர்மராஜனே! **गौतमः** - [என்னுடைய பிதாவாகிற] கௌதமர், **मा अभि** - என் விஷயமாக, **शान्तसङ्कल्पः** - சிந்தையற்றவராயும், **सुमनाः** - ப்ரஸந்நமான மநஸ்ஸை உடையவராயும், **वीतमन्युः** - கோபமற்றவராயும், **यथा स्यात्** - எப்படி இருப்பாரோ; **त्वत्प्रसृष्टम्** - உம்மால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள, **मा अभि** - என்னைக் குறித்து, **प्रतीतः** - ப்ரீதியுடன் கூடினவராய், **[यथा] वदेत्** - எப்படிப் பேசுவரோ; **एतत्** - [அப்படிப்பட்ட] இதை [அதாவது: இந்த யாசநத்தை], **त्रयाणां प्रथमं वरम्** - [நீர் கொடுக்கப்போகும்] மூன்று வரங்களுள் முதல் வரமாக, **वृणे** - வரிக்கிறேன்.

शान्तसङ्कल्पः - 'என்னுடைய புத்ரனாகிற நசிகேதஸ் யமனுக்குத் தாநமாகக் கொடுக்கப்பட்டானே. இவனால் பூர்ணகாமனான யமனுக்கு என்ன பலம் ஏற்படும்?' என்று யாதொரு சிந்தை உண்டோ அந்தச் சிந்தையற்றவனாய் என்பது கருத்து.

वीतमन्युः - 'என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறாய்?' என்று இரண்டு மூன்று தடவை நசிகேதஸ் பிதாவைப் பார்த்துக் கேட்டபொழுது, பிதாவுக்கு யாதொரு கோப முண்டாயிற்றோ, அந்தக் கோப மற்றவராய்.

सुमनाः - கோபம் ஶமநமாகி மாத்ரம் போதாது; அவர் நசிகேதஸ் விஷயத்தில் அதற்கு முந்தி எம்மாதிரி ப்ரீதியைச் செய்திருந்தாரோ அப்படிப்பட்ட ப்ரீதியுடன் கூடினவராய்.

अभिवदेत् - மாநஸிகமாக ப்ரஸந்நராயிருப்பதுடன்கூட, தன்னுடன் ப்ரீதிபுரஸ்ஸரமாக வார்த்தையும் சொல்லவேண்டும் என்பது கருத்து. இந்தப் பதத்திற்கு வேறொரு பொருளும் உரைக்கலாம். **अभिवदति** என்பதற்கு 'ஆசீர்வதிப்பது' என்றும் பொருள் உண்டு. அதாவது—'நான் போய் அவருக்கு நமஸ்காரம் செய்தால், அதை அவர் அங்கீகரித்து என்னை ஆசீர்வதிக்கவேண்டும்.'

—

11. ம்ருத்யு பதில் சொல்லுகிறார்.

[ப-ரை.] **औद्दालकिः** - உத்தாலகருடைய குமாரராயும், **आरुणिः** - அருணனுடைய வம்ஶத்தில் ஜநித்தவருமான [உன் தகப்பனாராகிய

"स्वर्गे लोके न भयं किञ्च नास्ति न तत्र त्वं न जरया बिभेति ।
उभे तीर्त्वा अशनायापिपासे शोकातिगो मोदते स्वर्गलोके ॥ १२

"स त्वमग्निँ स्वर्गमध्येषि मृत्यो प्रब्रूहि तँ श्रद्धधानाय मह्यम् ।
स्वर्गलोका अमृतत्वं भजन्त एतद्द्वितीयेन वृणे वरेण ॥" १३

கௌதமர்], **मत्प्रसृष्टः** - என்னால் அநுக்ரஹிக்கப்பட்டவராய் [அதாவது: என்னுடைய அநுக்ரஹத்தால்], **यथा पुरस्तात्** - முன்போலவே, **प्रतीतः** - [உன்னிடத்தில்] ப்ரீதியுள்ளவராக, **भविता** - இருப்பர். **मृत्युमुखात्** - ம்ருத்யுவின் முகத்திலிருந்து, **प्रमुक्तम्** - விடப்பட்டிருக்கும், **त्वाम्** - உன்னை, **ददृशिवान् [सन्]** - பார்த்துக்கொண்டு, **वीतमन्युः** - கோபமற்றவராய், **रात्रीः सुखं शयिता** - ராத்ரிகாலம் முழுவதும் ஸுகமாகத் தூங்குவர்.

இவ்விடத்தில் ஸந்தோஷாதிக்யத்தால் யமன், நசிகேதஸ்ஸின் பிதாவின் பெயரையும் வம்ஶத்தையுமிட்டுக் கௌதமரை வ்யவஹரிக்கிறார்.

मत्प्रसृष्टः - இதற்கு, 'என்னால் அநுஜ்ஞை கொடுக்கப்பட்டவராய்' என்பது பொருள். 'என்னுடைய அநுக்ரஹத்தால்' என்பது தாத்பர்யம். **मत्प्रसृष्टम्** என்றும் ஒரு பாடமுண்டு. அப்பொழுது, 'என்னால் திருப்பி அனுப்பப்பட்ட' [உன்னைக் குறித்து] என்பது பொருள்.

'ராத்ரியெல்லாம் ஸுகமாகத் தூங்குவர்' என்று சொன்னது, கௌதமருடைய விசாரம் கோபம் முதலியவை நீங்கி விட்டன என்பதை விளக்குகின்றது. துக்காவேகம் ப்ராயேண ராத்ரி காலங்களில் அஸஹ்யமாக இருந்துகொண்டு நித்ரையைப் பாதிக்கும் என்பது அநுபவஸித்தம். ஆகையால் 'ராத்ரி ஸுகமாகத் தூங்குவர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

---

12 - 13. இந்த இரண்டு மந்த்ரங்களால் நசிகேதஸ் இரண்டாவது வரத்தை ப்ரார்த்திக்கிறான்.

[ப - ரை.] **स्वर्गे लोके** - மோக்ஷமென்று சொல்லப்படும் ஸ்தாநத்தில், **किञ्चन भयन्नास्ति** - எவ்வித பயமும் இல்லை. **तत्र** - அவ்விடத்தில், **त्वं न** - நீர் இல்லை [அதாவது: உமக்கு அவ்விடத்தில் ப்ரஜைகளைக் கொல்லும் அதிகாரம் இல்லை]; **जरया न बिभेति** - [அவ்விடத்தில் இருக்கும் ப்ரஜைகள்] கிழத்தனத்தால் பயப்படுகிறதில்லை. **स्वर्गे लोके** - அந்த மோக்ஷ ஸ்தாநத்தில், [அவ்விடத்திலிருக்கும் புருஷன்] **अशनायापिपासे** - பசி தாஹங்களாகிற, **उभे** - இவை இரண்டையும், **तीर्त्वा** - கடந்து, **शोकातिगः** - ஶோகமற்றவனாக, **मोदते** - ஆநந்தாநுபவம் செய்கிறான். [இவ்வாறு நான் பெரியோர்களிடமிருந்து கேட்டிருக்கிறேன்.]

हे मृत्यो - ஹே ம்ருத்யுவே! **स त्वम्** - ப்ரஸித்தராயிருக்கும் நீர், **स्वर्ग्यम्** - அந்த மோக்ஷ ஸ்தாநத்தை ப்ரயோஜநமாக உடைய, **अग्निम्** -

"प्र ते ब्रवीमि तदु मे निबोध स्वर्ग्यमग्निं नचिकेतः प्रजानन् ।
अनन्तलोकाप्तिमथो प्रतिष्ठां विद्धि त्वमेतन्निहितं गुहायाम् ॥" १४

அக்நியை [அதாவது: அக்நி ஸம்பந்தமான ஒரு கர்ம விசேஷத்தை] **अध्येषि** - அறிவீரன்றோ? **तम्** - அதை, **श्रद्दधानाय** - [மோக்ஷத்தில்] ஶ்ரத்தையையுடைய, **मह्यम्** - எனக்கு, **प्रब्रूहि** - உபதேசியும். **स्वर्गलोकाः** - அந்த மோக்ஷ ஸ்தாநத்தை அடைந்திருப்பவர், **अमृतत्वं** - [தேஶ விசேஷ ப்ராப்தியுடன் ப்ரஹ்மத்தை அடைந்து தனது ஸ்வரூபாவிர்ப்பாவத்தைப் பெறுவதான] அம்ருதத்வத்தை, **भजन्ते** - பெறுகிறார்கள். **एतत्** - இதை, **द्वितीयेन वरेण** - இரண்டாவது வரமாக, **वृणे** - அர்த்திக்கிறேன்.

இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள அக்நி கார்யமானது, ஒரு அநுஸந்தாந விசேஷத்துடன் செய்யப்படும் ஒரு கர்மாவைக் குறிக்கின்றது. அம்மாதிரி உபாஸித்தால் உபாஸகர்கள் மோக்ஷத்தைப் பெறுவார்கள் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டு, அதை அறிவதற்கு அவன் விரும்புகின்றான்.

'ஸ்வர்க்கம்' என்னும் பதம் இவ்விடத்தில் மோக்ஷத்தைக் குறிக்கின்றது என்றே சொல்லவேண்டும். அந்த ஶப்தம், ஜ்யோதிஷ்டோமாதி யாகங்களைச் செய்வதால் கிடைக்கக் கூடியதாயும் அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள ஒரு லோகத்தைக் குறிப்பதுடன், ஶாஸ்வதமாயும் அநந்தமாயும் இருக்கும் மோக்ஷ ஸ்தாநத்தையும் குறிக்கும். இவ்விடத்தில் அந்த லோகத்தைப்பற்றிய ப்ரஶ்நத்திலும் ப்ரதிவசநத்திலும் 'அவ்விடத்தில் ஜநந மரணங்கள் இல்லை' என்று சொல்லப்பட்டிருப்பதே அந்த ஶப்தம் மோக்ஷ ஸ்தாநத்தைக் குறிக்கின்றது என்பதை ஸூசிப்பிக்கின்றது என்பது விளங்கும். நிற்க: மூன்றாவது வரத்தைக் கேட்குமிடத்தில் நசிகேதஸ் ப்ரஸித்த ஸ்வர்க்கம் போன்ற நஶ்வர பலங்களை நிந்தித்துப் பேசுகிறான். அவ்விதம் அந்த ஸ்வர்க்கத்தில் வெறுப்புள்ளவன், அதைப் பலமாக உடைய ஜ்ஞாநத்தைப் பெறுவதிலும் அதை அநுஷ்டிப்பதிலும் ஆவலுள்ளவனாக இருக்கிறான் என்று சொல்வது உபபந்நமாகமாட்டாது. 'ஸ்வர்க்க' ஶப்தம் ப்ரக்ருஷ்ட ஸுகத்தைச் சொல்லுகின்றதாகையால், அதை, நிரவதிக ஆநந்த ரூபமான மோக்ஷத்திற்கு வாசகமாகவும் எடுத்துக்கொள்ளலாம். அம்மாதிரி ப்ரயோகங்களும் ஏராளமாக இருக்கின்றன.

अशनाया - பசி; இது **अशन**- என்னும் ஶப்தத்திலிருந்து உண்டான பதம்; 'ஆ'காரத்தை அந்தத்திலுடைய ஸ்த்ரீலிங்க ஶப்தம். **पिपासा** - தாஹம். **पातुं इच्छा पिपासा**.

स्वर्गलोकाः - **स्वर्गो लोको येषान्ते** - என்று பஹுவ்ரீஹி. ஸ்வர்க்கத்தை ஸ்தாநமாக உடையவர்கள் என்பது பொருள்.

---

14. ம்ருத்யு பதில் சொல்லுகிறார்.

लोकादिमग्निं तमुवाच तस्मै या इष्टका यावतीर्वा यथा वा ।
स चापि तत्प्रत्यवदद्यथोक्तमथाऽस्य मृत्युः पुनरेवाह तुष्टः ॥ १५

[ப - ரை] **ते** - உனக்கு, **प्रब्रवीमि** - சொல்லுகிறேன் **मे** - என்னிடமிருந்து, **तत् उ** - அதை, **निबोध** - அறிந்துகொள்; **नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **स्वर्ग्यं** - மோக்ஷத்தைப் பலமாக உடைய, **अग्निम्** - அக்நியை, **प्रजानन्** - அறிந்துகொண்டு [அதை அநுஷ்டிக்கிறவன்], **अनन्तलोकाप्तिम्** - அநந்தனுகிற விஷ்ணுவின் லோக ப்ராப்தியையும், **अथ** - பிறகு, **प्रतिष्ठाम्** - [அவ்விடத்திலேயே] ஸ்திரமான இருப்பையும், [**लभते** - அடைகிறுன்]. **एनम्** - இதை [அதாவது: இந்த ஜ்ஞாநம் மோக்ஷத்திற்கு ஹேது வென்பதை], **गुहायां निहितम्** - குஹைக்குள் வைக்கப்பட்டதாக [அதாவது: மற்றெருவராலும் அறியப்படாததாக], **त्वम्** - நீ, **विद्धि** - அறிந்துகொள்.

---

15. இவ்வாறு அதைப் புகழ்ந்து பேசிவிட்டு, ம்ருத்யுவானவர் நசிகேதஸ்ஸுக்கு அதை உபதேஶித்தார் என்று இந்த மந்த்ரம் சொல்லுகின்றது.

[ப - ரை.] **तस्मै** - அவனுக்கு [அந்த நசிகேதஸ்ஸுக்கு], **तम्** - அந்த, **लोकादिम्** - [கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஸ்வர்க்க] லோகத்திற்கு ஹேதுவான, **अग्निम्** - அக்நியை, **उवाच** - [ம்ருத்யு] உபதேஶித்தார். **इष्टकाः** - இஷ்டகைகள், **याः** - என்ன லக்ஷணத்துடன் கூடியவையாக இருத்தல் வேண்டும் என்பதையும், **यावतीः** - எவ்வளவு இஷ்டகைகள் தேவை என்பதையும், **यथा वा** - அந்த இஷ்டகைகளை எப்படிச் சயநம் செய்யவேண்டு மென்பதையும், [**उवाच** - சொன்னூர்]. **स चाऽपि** - அவனும், **तत्** - அவை எல்லாவற்றையும், **यथोक्तम्** - (ம்ருத்யு) சொன்னபடியே, **प्रत्यवदत्** - திருப்பிச் சொன்னுன். **अथ** - பிறகு, **मृत्युः** - ம்ருத்யுவானவர், **तुष्टः** - ஸந்தோஷம் அடைந்தவராய், **अस्य** - அவனுக்கு, **पुनरेव** - மறுபடியும், **आह** - சொன்னூர்.

इष्टका - இது யாகத்தில் உபயோகப்படும் கல்லுக்குப் பெயர் **चयनम्** - ஒன்றன்மேல் ஒன்ருகவும் பக்கங்களிலும் யாகக் கற்களை அடுக்கும் வ்யாபாரம். அந்தக் கற்களுள் ஒன்ருல் அக்நியை எடுப்பதற்கும் இந்த ஶப்தம் வாசகமாகும். இம்மாதிரி கற்களை அடுக்குவதையும், அவைகளின் ஸங்க்யை ப்ரகாரம் இவைகளையும், இந்த அக்நி வித்யைக்கு ப்ரதாந அங்கமாகப்பேசி யிருப்பதையும் பார்த்தால், இது கேவலம் கர்மமோவென்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். இது கேவலம் கர்மமன்று. கேவலம் கர்மமாக இருந்தால், இதற்கு மோக்ஷம் பலமாகமாட்டாது. **नास्त्यकृतः कृतेन** [கேவல கர்மங்களால் அக்ருதமான மோக்ஷம் லபிக்காது] என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வித்யையில் யாகம் செய்வதுபோன்ற கர்மம் ப்ரதாநமாக இருந்தாலும், இதற்குப்

तमब्रवीत् प्रीयमाणो महात्मा "वरं तवेहाद्य ददामि भूयः ।
तवैव नाम्ना भविताऽयमग्निः सृङ्काञ्चेमामनेकरूपां गृहाण ॥ १६

त्रिणाचिकेतस्त्रिभिरेत्य सन्धिं त्रिकर्मकृत्तरति जन्ममृत्यू ।
ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा निचाय्येमाँ शान्तिमत्यन्तमेति ॥ १७

பரமாத்மோபாஸநத்துடன் ஸம்பந்தமுண்டு என்று சொல்லப்படுகிற படியால், இதை வித்யையென்று சொல்வதற்கு ஆக்ஷேபமில்லை [17-வது மந்த்ரத்தைப் பார்க்க.]

तुष्टः - ஒருதடவை சொன்ன மாத்ரத்தால் ஸகலத்தையும் தவறாது க்ரஹித்த ஶிஷ்யனுடைய க்ரஹண ஸாமர்த்யத்தைப் பார்த்தவுடன் ம்ருத்யுவுக்கு ஸந்தோஷம் உண்டாயிற்று. புத்திமானாக இருக்கும் ஶிஷ்யனிடத்தில் விஶேஷ ப்ரீதி ஜநிப்பது ஆசார்யர்களுக்கு ஸஹஜமே.

---

16. ம்ருத்யு, தாம் அடைந்த ஸந்தோஷத்தின் பரீவாஹமாக நசிகேதஸ்ஸுக்குப் பாரிதோஷிக மொன்றைக் கொடுக்கிறார்.

[ப - ரை.] **प्रीयमाणः** - ஸந்துஷ்டரான, **महात्मा** - [அந்த ஸந்தோஷத்தால்] விஶாலமான மநஸ்ஸை உடைய [ம்ருத்யு], **तम्** - அவனை (நோக்கி), **अब्रवीत्** - சொன்னார். '**तव** - உனக்கு, **इह** - இந்த ஸந்தர்ப்பத்தில், **अद्य** - இப்பொழுது, **भूयः** - மறுபடியும், **वरं ददामि** - ஒரு வரத்தைக் கொடுக்கிறேன். **अयमग्निः** - இந்த அக்நியானது [என்னால் உபதேஶிக்கப்பட்ட இந்த அக்நி], **तवैव नाम्ना** - உன்னுடைய பெயரினாலேயே [அதாவது: நாசிகேதம் என்னும் பெயருடனேயே], **भविता** - ப்ரஸித்தியைப் பெறும். **अनेकरूपाम्** - விசித்ரமான, **इमां सृङ्काञ्च** - இந்த ரத்நமாலையையும், **गृहाण** - வாங்கிக்கொள்.'

இந்த வரத்தை ம்ருத்யு தாமாகவே கொடுக்கிறாராகையால், நசிகேதஸ்ஸால் அர்த்திக்கப்படவேண்டிய மூன்று வரங்களுள் இது ஒன்றாக மாட்டாது. இம்மாதிரி புத்திஶாலியான ஶிஷ்யர்களுக்கு வரதாதாக்கள் தாமே பரிசு வழங்குவது வழக்கம். ரத்நமாலை கொடுப்பதைக்காட்டிலும், அந்த அக்நிக்கு அவனுடைய பெயரை இட்டு அது வழியாக அவனுடைய பெயருக்கு ப்ரஸித்தியை ஸம்பாதித்து வைப்பது மிகவும் உயர்ந்த பரிசே ஆகும். 'ஸ்ருங்கை' என்பது மதுரமான ஒரு ஶப்தத்தைச் செய்யும் ரத்நமாலைக்குப் பெயரென்று சொல்வார்கள்.

---

17. இந்த அக்நிவித்யைக்கு ப்ரஹ்மோபாஸநமே அங்கி என்பதையும், அந்த உபாஸநத்தின் ப்ரகாரம் எப்படிப்பட்டது என்பதையும், இந்த வித்யையின் பலம் அத்யந்த ஶாந்தியை லக்ஷணமாக உடைய

மோக்ஷமே என்பதையும் இந்த மந்த்ரம் விளக்குகின்றது. வேதத்தில் "**अयं वाव यः पवते**" என்று ஓரிடத்தில் மூன்று அநுவாகங்கள் உண்டு. அவை இந்த அக்நி கார்யத்தில் விநியோகப்படுமவை. அந்த அநுவாகங்களை எவன் அத்யயநம் செய்கிறானோ, அவன் 'த்ரிணாசிகேதன்' என்னும் பதத்தால் குறிக்கப்படுகின்றான். இந்த வித்யை நசிகேதஸ்ஸின் பெயரால் ப்ரஸித்தமானதன்றோ?

[ப - ரை.] **त्रिणाचिकेतः**—நசிகேதஸ்ஸின் பெயரால் ப்ரஸித்தி பெற்றுள்ள மூன்று அநுவாகங்களையும் அத்யயநம் செய்கிறவன் [அதாவது: தர்மராஜனால் உபதேசிக்கப்பட்ட இந்தக் கர்மத்தைச் செய்கிறவன்], **त्रिकर्मकृत्** - மூன்று கர்மங்களையும் யதாவத்தாகச் செய்துகொண்டு, **त्रिभिः** - மூன்று தடவை இந்த அக்நியைச் சயநம் செய்தானேயானால், **सन्धिम्** - ஸம்பந்தத்தைப் பெற்று [அதாவது: பரமாத்மோபாஸநத்துடன் ஸம்பந்தத்தைப் பெற்று], **जन्ममृत्यू** - ஜநந மரணங்களை, **तरति** - தாண்டுகிறான். [அவன்] **ब्रह्मजज्ञम्** - ஜீவாத்மாவை, **ईड्यं देवम्** - ஸ்தோத்ரம் செய்வதற்கு அர்ஹமான பரமாத்மாத்மகமாக, **विदित्वा** - அறிந்து, **निचाय्य** - [அப்படி ப்ரஹ்மத்தைத் தனது அந்தராத்மாவாக உடைய தன்னை] ஸாக்ஷாத்கரித்து, **इमां शान्तिम्** - இந்த ஶாந்தியை [அதாவது: கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஜநந மரண ரூபமான அநர்த்தத்தின் ஶாந்தியை], **अत्यन्तम्** - ஶாஶ்வதமாக, **एति** - அடைகிறான்.

பரமாத்மோபாஸநம் இரண்டு ப்ரகாரமாகச் செய்யப்படலாம். 'ஜீவன் பரமாத்மாவை அந்தராத்மாவாக உடையவன்' என்று ஜீவாத்மாவை உபாஸிப்பது ஒன்று; 'ஜீவாத்மாவை ஶரீரமாக உடைத்தாயிருக்கிறான் பரமாத்மா' என்று பரமாத்மாவை உபாஸிப்பது மற்றொன்று. இவ்விருவரும் பரமாத்மோபாஸகர்களே யாவார்கள். இந்த இருவர்க்கும் மோக்ஷமே ப்ரயோஜநம். ஆகையால், இவ்விடத்தில் படிக்கப்பட்டிருக்கும் பலம் மோக்ஷமே என்பது ஸித்தம். நிற்க: ஜநந மரண ரூபமான அநர்த்தம் அத்யந்தமாக ஶாந்தியை அடைகின்றது என்று சொல்லப்பட்டிருப்பதும் இந்த நிர்ணயத்தையே த்ருடப்படுத்துகின்றது. அடுத்து வரும் 19-வது மந்த்ரத்தில் "**करोति तद्येन पुनर्न जायते** [மறுபடியும் ஜநநம் என்பது, எதைச் செய்தால் ஏற்படாமல் இருக்குமோ அதை இவன் செய்கிறான்] என்று சொல்லப்பட்டிருப்பதும் கவனிக்கத் தகுந்தது.

त्रिकर्मकृत् - மூன்று கர்மங்களையும் அநுஷ்டிக்கிறவனாய். மூன்று கர்மங்களாவன :—யாகம் செய்வது, வேதத்தை அத்யயநம் செய்வது, தாநம் கொடுப்பது. இவை வர்ணாஶ்ரம தர்மங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். மோக்ஷத்தை இச்சித்துப் பகவானிடத்தில் பக்தியையோ ப்ரபத்தியையோ செய்கிறவர்களும், அந்தப் பக்தி ப்ரபத்திகளுக்கு அங்கமாகக் கர்மங்களை அநுஷ்டித்தே வரவேண்டுமென்பதும் ஶாஸ்த்ரம்.

त्रिणाचिकेतस्त्रयमेतद्विदित्वा य एवं विद्वाँश्चिनुते नाचिकेतम् ।
स मृत्युपाशान् पुरतः प्रणोद्य शोकातिगो मोदते स्वर्गलोके ॥ १८

यो वाप्येतां ब्रह्मजज्ञात्मभूतां चितिं विदित्वा चिनुते नाचिकेतम् ।
स एव भूत्वा ब्रह्मजज्ञात्मभूतः करोति तद्येन पुनर्न जायते ॥ १९

ब्रह्मजज्ञम् - **ब्रह्मजश्चासौ ज्ञश्च** [ப்ரஹ்மத்தினிட மிருந்து உண்டான வனாயும் சேதநனாயும் இருப்பவன்.] ஜீவன் நித்யனாக இருந்தாலும் அவனுடைய ஸத்தை பகவத்தீநமானதால், அவனை ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து உண்டானவனாகச் சொல்லக்கூடும்.

देवम् - இது பரமாத்வைக் குறிக்கும். ஆனால், அந்தப் பொருளை எடுத்துக் கொண்டால், 'ஜீவனை ப்ரஹ்மமென்று அறிந்து' என்று ஜீவ பரமாத்மைக்யம் சொன்னதாகும். அது அநேக ஶ்ருதி வாக்யங்களுக்கு விருத்தமாகையால், அந்த அர்த்தம் த்யஜிக்கப்பட்டு, 'பரமாத்மாவை ஆத்மாவாக உடையவன்' என்னும் பொருள் க்ரஹிக்கப்படுகின்றது.

---

18. மறுபடியும் இந்தக் கர்மாவின் மஹிமையே புகழப் படுகின்றது.

[ப - ரை.] **यः** - எந்த, **त्रिणाचिकेतः** - த்ரிணாசிகேதன், **एतत् त्रयम्** இந்த மூன்றையும் [அதாவது: ப்ரஹ்ம ஸ்வரூபம், அந்த ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைய ஜீவ ஸ்வரூபம், சயநம் செய்யப்படும் அக்நியின் ஸ்வரூபம், ஆக இம்மூன்றையும்], **विदित्वा** - அறிந்து, **एवं विद्वान्** - அப்படிப்பட்ட ஜ்ஞாநத்தை உடையவனாக, **नचिकेतं** - நாசிகேதம் என்னும் பெயரைப் பெற்றிருக்கும் இந்த அக்நிகார்யத்தை, **चिनुते** - சயநம் செய்கிறானோ, **सः** - அவன், **मृत्युपाशान्** - ம்ருத்யு பாஶங்களை [அதாவது: ராகத்வேஷாதி லக்ஷணங்களான ம்ருத்யு பாஶங்களை], **पुरतः** - [ஶரீரம் போவதற்கு] முன்னதாகவே, **प्रणोद्य** - விலக்கிவிட்டு, **शोकातिगः** - ஶோகத்தைக் கடந்தவனாய், **स्वर्गलोके** - மோக்ஷஸ்தாநத்தில், **मोदते** - ஆநந்தாநுபவம் செய்து கொண்டிருப்பான்.

एतत् त्रयम् - இந்த மூன்றையும். இந்தக் கர்மாவை அநுஷ்டிக்கும் காலத்தில் எவைகளின் அநுஸந்தாநம் முக்யமோ, அவைகளே இவ்விடத்தில் விவக்ஷிதங்கள். அவை: ப்ரஹ்மம், அதை ஆத்மாவாக உடைய ஜீவன், இவைகளின் ஜ்ஞாநத்துடன் செய்யப்படும் அக்நி சயநம், ஆக இந்த மூன்றின் ஸ்வரூபங்களே.

---

19. இந்த மந்த்ரத்தில் அபுநராவ்ருத்தி வ்யக்தமாகச் சொல்லப் படுகின்றது.

एष तेऽग्निर्नचिकेतः स्वर्ग्यो यमवृणीथा द्वितीयेन वरेण ।
एतमग्निन्तवैव प्रवक्ष्यन्ति जनासस्तृतीयं वरन्नचिकेतो वृणीष्व" ॥ २०

[ப - ரை] **यो वाऽपि** - எவனொருவன், **एतां चितिम्** - இந்தச் சயநரூபமான கர்மாவை, **ब्रह्मजज्ञात्मभूतां** - 'தனது ஸ்வரூபம் ப்ரஹ்மாத்மகம்' என்னும் ஜ்ஞாநத்துடன் கூடினதாக, **विदित्वा** - அநுஸந்தாநித்துக் கொண்டு, **नचिकेतम्** - நசிகேதம் என்னும் அக்நியை, **चिनुते** - சயநம் செய்கிறானோ, **स एव** - அவன்தான், **ब्रह्मजज्ञात्मभूतो भूत्वा** - ப்ரஹ்மாத்மகமான ஸ்வாத்மாவை அநுஸந்தாநம் செய்கிறவனாகி, **येन पुनर्न जायते** - எதைச் செய்தால் மறுபடியும் பிறப்புள்ளவனாக மாட்டானோ, **तत् करोति** - அதைச் செய்தவனாவான்.

இந்தக் கர்மம் இவ்வாறு பகவதுபாஸந பூர்வகமாக இருத்தல் வேண்டுமென்றும், அந்த உபாஸநத்தால் அபுநராவ்ருத்தியை லக்ஷணமாக உடைய மோக்ஷமே ப்ரயோஜநமாகக் கிடைக்கின்றதென்றும் இந்த மந்த்ரங்கள் வ்யக்தமாகச் சொல்வதே இந்தக் கர்மத்திற்குப் பலமாகச் சொல்லப்படும் 'ஸ்வர்க்கம் மோக்ஷத்திற்கு வாசக'மென்பதை நன்றாக விளக்குகின்றது.

---

20. [ப - ரை] **यम्** - எதை, **द्वितीयेन वरेण** - இரண்டாவது வரத்தால், **अवृणीथाः** - ப்ரார்த்தித்தாயோ, **नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **स्वर्ग्य एषः** - மோக்ஷத்தை ப்ரயோஜநமாக உடைய இதுவே, **ते** - உனக்கு, [**उपदिष्टः** - உபதேசிக்கப்பட்டது]. **जनासः** - ஜநங்கள், **एतमग्निम्** - இந்த அக்நியை, **तवैव** [**नाम्ना**] - உன்னுடைய [பெயரினாலேயே], **प्रवक्ष्यन्ति** - சொல்லுவார்கள். **नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **तृतीयं वरम्** - மூன்றாவது வரத்தை, **वृणीष्व** - வரித்துக்கொள்.

जनासः - இது வைதிகமான ரூபம்; **जनाः** - என்பது லௌகிகம்.

கீழே 13-வது ச்லோகத்தின் அர்த்தத்தை விவரிக்குமிடத்தில், 'இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கும் 'ஸ்வர்க்க' சப்தம் மோக்ஷத்தைக் குறிக்கின்றது; ப்ரஸித்த ஸ்வர்க்கத்தைக் குறிக்கவில்லை' என்று விவரித்திருக்கிறோம். பகவான் பாஷ்யகாரர் அம்மாதிரியே திருவுள்ளம்பற்றி இருக்கிறார். "**स्वर्गशब्देनात्र परमपुरुषार्थलक्षणो मोक्षोऽभिधीयते**" [இவ்விடத்தில் 'ஸ்வர்க்க' சப்தமானது பரம புருஷார்த்தமாகிற மோக்ஷத்தையே சொல்லுகின்றது] என்பது அவருடைய திவ்ய ஸூக்தி. இந்த அர்த்தம் அந்த சப்தத்திற்கு முக்யமான அர்த்தமாகுமா? இல்லாவிட்டால், அமுக்யமான அர்த்தமேயா? என்று பெரியதொரு விவாதமுண்டு. இரண்டும் உபபந்நமாக மாட்டாது என்பது பூர்வ பக்ஷியின் கக்ஷி. "**स्वर्गापवर्गमार्गाभ्याम्**" "**स्वर्गापवर्गयोरेकम्**" "**न स्वर्गं नापुनर्भवम्**" இத்ய[illegible]களில் 'ஸ்வர்க்க' சப்த

Regd. No. M. 4437

ஸ்ரீ:

புத்தக விளம்பரம்

ஸ்ரீமத் வேதாந்த தேசிக க்ரந்த மாலா

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸம்ஸ்க்ருத க்ரந்தங்கள் யாவும் தேவநாகர லிபியில் வெகு நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவர் அருளிச்செய்த 32 ரஹஸ்யங்களும் தேசிக ப்ரபந்தங்களும் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மொத்தம் 9 ஸம்புடங்கள் விலை ரூ. 30—0—0

தனித்தனி ஸம்புடங்களின் விலை விவரம்

1. **ஸ்தோத்ராவளீ விபாகம்.**—ஹயக்ரீவ ஸ்தோத்ரம் முதல் பாதுகா ஸஹஸ்ரம் வரை ஸகல ஸ்தோத்ரங்களும் ... ரூ. 2—0—0
2. **வேதாந்த விபாகம்—1.** அதிகரண ஸாராவளியும் சத தூஷணியும் ... ரூ. 3—0—0
3. ஷை 2. மீமாம்ஸாபாதுகா, ஸேச்வரமீமாம்ஸா, ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்ஜநம் ரூ. 3—0—0
4. ஷை 3. ஸர்வார்த்த ஸித்தியோடு கூடின தத்வ முக்தாகலாபம், ... ரூ. 4—0—0
5. **காவ்ய நாடக விபாகம்.**—ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷிதநீவி, யாதவாப்யுதயம், ஸங்கல்ப ஸூர்யோதயம் ... .. ரூ. 3—0—0
6. **வ்யாக்யாந விபாகம் 1.**—ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம், சதுச்லோகி பாஷ்யம், ஸ்தோத்ர பாஷ்யம், கத்ய பாஷ்யம் ... ரூ. 2—0—0
7. ஷை 2. கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷா, கீதா பாஷ்யமும் தாத்பர்ய சந்த்ரிகையும் ... ரூ. 5—0—0
8. ஷை 3. தத்வடீகை, நிக்ஷேபரக்ஷை, ஸச்சரித்ர ரக்ஷை, பாஞ்சராத்ர ரக்ஷை முதலியவை ... ரூ. 4—0—0
9. **தேசிக ப்ரபந்த ரஹஸ்யங்கள்** (தெலுங்கு லிபி) ... ரூ. 5—0—0

ஸ்ரீ பகவத் ராமாநுஜ க்ரந்த மாலா.—உடையவர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலிய ஸகல க்ரந்தங்களும் ஒரே ஸம்புடமாக (தெலுங்கு லிபி) ... ... ரூ. 6—0—0

ஸ்ரீமத்வரவரமுநீந்த்ர க்ரந்தமாலா.—மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீ வசநபூஷண, தத்வத்ரய, முமுக்ஷுப்படி, ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யாநங்களெல்லாம் ஒரே ஸம்புடமாகத் தெலுங்கு லிபி ரூ. 6—0—0

ஸ்தோத்ர மாலா ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வழங்கும் ஸகல ஸ்தோத்ரங்களும். (நாகர லிபி) ... ... ரூ. 1—8—0

ஸ்ரீ வைஷ்ணவஸுதா—ஸம்ஸ்க்ருத பாஷையிலும் ஹிந்தீ பாஷையிலும் மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை. வருஷச் சந்தா ... ரூ. 2—0—0

: கிடைக்குமிடம் :

P. B. அண்ணங்கராசாரியர்,

க்ரந்தமாலா ஆபீஸ் : : காஞ்சீபுரம்

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—1—'43 to 31—1—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

		Rs.
	For 1942.	
1.	Sri K. Vedantadesikan, Headmaster, R.M. High School ...	3
2.	,, V. Srinivasa Iyengar, Rtd. Head Clerk, Vridhachalam ...	3
3.	,, R. Rajagopala Iyengar, 'Gopaul Nivas' Balakrishna Road, Lakshminarasimhanagar ...	3
4.	,, Lalapettai Desikachariar, North Mada Street, Thinnanore ...	3
5.	,, Settlur Srinivasachariar, Echur Village, Wandiwash ...	2
6.	,, T. E. Krishnamoorthy Iyengar, Vakil, Tindivanam ...	3
	For 1943.	
1.	,, R. Sundararajan, 306, West Main Street, Madura ...	3
2.	Sm. S. Rangammal, c/o Sri A. Rangaswami Iyengar, Sarobarajapuram, Punthottam ...	3
3.	Sri M. Ramaswami Iyengar Rtd. Inspector of Schools, Gopalasamudram	3
4.	,, V. Doraiswami Iyengar, Rtd. Tahsildar, 32, Kanakavallipuram Street, Thiruvellore ...	3
5.	,, S. Rangaswami Iyengar, Sub-Magistrate, Tindivanam	3
6.	,, M. S. Krishnamachariar, Sixth Cross Road, Bangalore ...	3
7.	,, V. R. Narayanan, Botley Bouy Co., 77, Third Cross Road, Bangalore ...	3
8.	,, V. T. Vedanta Ramanujachariar, Pleader, Poonamalle ...	3
9.	,, T. K. Soundararaja Iyengar, D.T.S., Trichinopoly ...	3
10.	,, K Sundaram Iyengar, Station Master, Satur, Ramnad Dt. ...	3
11.	,, S. Thiruvenkatachary, Station Engineer, All-India Radio, Trichinopoly ..	3
12.	,, K. Gopala Iyengar, Proprietor, The Hindu, Madras ...	3
13.	,, K. R. Aravamudhan, Office of the Dy. Financier Adviser, Supply Finance, Reserve Bank Buildings, Bombay ...	3
14.	,, K. Rajagopalan, 1st Floor, 'Kesar Villa,' 595, Vincent Road, Matunga (G.I.P.) ...	3
15	,, M. V. Ramaswami Iyengar, Block No. 5, 1st Floor Viswes Bhuvan, Deodar Road, Matunga ...	3
16.	Sri Soumyanarayanan, Agent, Chettiar Bank, Kulithali ...	3
17.	,, P. S. Narayana Iyengar, Vakil, Sundarapuram, Manamadurai ...	3
18.	,, P. Narasimhachariar, Yarn merchant, 1/46, A. Mint St. ..	3
19.	,, D. Vedantacharya, 18 Beperpaul Road, P O., Kalighat ...	3
20.	,, K N. Ramaswami Iyengar, 20 Masi Street, Madura ...	3
21.	,, T. S. Pitchu Iyengar, Rtd. Headmaster, Thiruparangudi, Tinnevelly Dt. ...	3
22.	,, A. R. Narasimha Iyengar, Rtd. Forest Officer, 'Arya Vilas' Ganapathynagar, Tanjore Dt. ...	3
23.	,, V. Krishnaswami Iyengar, Banker, Rasipuram, Salem Dt. ...	3
24.	,, P. S. Raghava Iyengar, Agent, Burmah Shell, Tinnevelly ...	3
25.	,, K. Narayana Iyengar, Police Traffic Inspector, Egmore, Madras ...	3
26	,, R Rajagopala Iyengar, Pensioner, Vaduvoor, ...	3
27.	,, H. R. Ramaswami Iyengar, Accounts Office, Mysore Iron and Steel Works, Badravathy ...	3
28	,, A. Venkatachar, Government Certified Auditor and approved Income-tax Officer, Mandya, Mysore State ...	3
29.	,, R. Rajagopala Iyengar, 'Gopaul Nivas,' Balakrishna Road, Lakshminarasimbanagar ...	3
30.	,, Lalapettai Desikachariar North Mada Street, Thinnanore ...	3
31	,, D. Sesha Iyengar, Sub-Post master, Chilakalapedu ...	3
32.	,, R Krishnaswami Iyengar, 6607 Kingsway, Secunderabad Deccan ...	3
33.	,, V. Krishnamachari, C/o Vijayaraghava Iyengar, Siruvaviduthi, Thiruchitrambalam, Pattukotai ...	3
34.	,, V. E Krishnamachariar, 'Sri Pathukasramam' Srirangaraja veethi, Little Conjeevaram ...	3
35.	,, Pillapakkam Raghavachari, 72 Anakatti Street, L. Conjeevaram ...	3
36.	,, S. Ranga Iyengar, Vakil, North Street, Karur ...	3

[இந்த ஸஞ்சிகையுடன் பதினன்கு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. 1942-வது வருஷத்தியச் சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது.]